# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2049 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

## பதவிகள் - வெற்றிடம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

திருத்தம்

**சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு**

அறிவித்தல்

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிறைவேற்று சேவை வகுதியின் சட்ட அலுவலர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அறிவித்தல் 2017.04.12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (IIஅ) இல் 04-503 ஆம் அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டது.

எனினும், மேலே சொல்லப்பட்ட ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அறிவித்தல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதை இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

செயலாளர் (பதிற் கடமை),
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு,
மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு.

*12-73*

---

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சு**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2018**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் பொருட்டு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பரீட்சை**.- இப்பரீட்சை 2018, பெப்புருவரி மாதம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் கண்டியில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கும் அல்லது இரத்துச்செய்வதற்கும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இலங்கை தொழில்நுட்ப சேவையின் கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் :

(i) நியமனம் பெறும் உத்தியோகத்தர் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுத்தப்படுவர் என்ற நிபந்தனையின் பேரிலேயே நியமிக்கப்படுவர்.

(ii) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உடையதுமாகும். உமக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(iii) ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். அரசாங்க சேவைப்பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவாரேயாயின் அது தொடர்பில் நியமனமானது ஒரு வருட பதில் கடமை காலப் பகுதிக்கு உட்பட்டதாக அமையும். திறந்த ஆட்சேர்ப்பு முறையில் நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அத்தகைய பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் விதித்துரைத்த முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி எய்துதல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் சகல உத்தியோகத்தர்களும் சேவையில் சேர்ந்துகொண்ட அரச கரும மொழிக்கு மேலாக மற்றைய அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சியை, சேவையில் சேர்ந்து 5 வருடத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(v) நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்புரைக்கும் தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும் நிதிப்பிரமாணத்திற்கும் அரசாங்கத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அமைச்சு மற்றும் திணைக்களம் என்பவற்றின் பணிப்புரைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

4. **சம்பளத் திட்டம்**.- எம்என்-3-2016ஏ- இலங்கை தொழில்நுட்ப சேவையின் கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் III ஆம் தரத்தின் ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - 57,550. (பொ. நி. சு. 03/ 2016 இற்கு அமைய மாதாந்தம்) இச்சம்பளத் திட்டத்தில் ரூபா 31,040 - 18 x 445 - 39,050 சம்பளப் படிமுறையும் இத்தரத்திற்கு உரியதாகும். III ஆம் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் இயைபுடைய வேதன அளவுத் திட்டத்தின் மூன்றாம் வேதன அளவு நிலையை எய்துவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5. **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று வயது 18 இற்கு குறையாமலும் 30 இனை விஞ்சிவிடாமலும் இருத்தல் வேண்டும்.

6. **கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற் தகைமைகள்**.- இரசாயன விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்கள் உள்ளடக்கப்பட்டு விஞ்ஞான/ கணித துறைக்குரிய பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உ. த.) ப் பரீட்சையை ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ;

அத்துடன்

சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) ப் பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ;

*தொழிற் தகைமைகள்*.- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பப் பாடசாலை ஒன்றில் இருந்து வழங்கப்படும் இரு வருட கால்நடை வளர்ப்பு டிப்ளோமா தொடர்பான சான்றிதழை பெற்றிருத்தல் ;

அல்லது

கால்நடை வளர்ப்பு துறைக்கு உரிய தேசிய தொழிற்பயிற்சித் தகைமை (NVQ) 6 மட்டத்தின் தகைமைகளைப் பூரணப்படுத்தி இருத்தல்.

அல்லது

உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழை வழங்குகின்ற நிறுவனத்திடம் வினவி கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகலவிதத்திலும் சமமானது என மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- விண்ணப்ப முடிவுத் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ சகல தகைமைகளையும் பெற்றிருக்க வேண்டியதுடன் பெறுபேறுகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*உடற்தகைமை.-* பதவியில் கடமையை மேற்கொள்வதற்குப் போதிய உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டவராக இருப்பதுடன், உடற்றகுதி வைத்திய பரிசீலனைச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

*ஏனைய தகைமைகள் :*

(i) சகல விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) சகல விண்ணப்பதாரரும் சிறந்த குணவியல்பு உள்ளவராக இருத்தல் வேண்டும் ;
(iii) சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டு போட்டிப் பரீட்சைக்கு அமருவதன் பொருட்டு தேவையான தகைமைகளைக் கொண்டிருப்பது என ஏற்றுக்கொள்வது விண்ணப்பதாரர் உரிய சகல தகைமைகளையும் மற்றும் உரிய வயதெல்லை என்பவற்றை விண்ணப்பக் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்படும் இறுதித் திகதி அன்று சகலவிதத்திலும் தகைமைகளைப் பூர்த்திசெய்து இருந்தால் மாத்திரமேயாகும்.

7. **ஆட்சேர்ப்பு முறை.-** எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை என்பவற்றின் பெறுபேற்றிற்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையுடையோர் தெரிவுசெய்யப்படுவர்.

*எழுத்துமூலப் பரீட்சை.-* இப்பரீட்சை வினாப்பத்திரம் 2 இனைக் கொண்டமைந்ததாகும் :

| *பாடங்கள்* | *நேரம்* | *உச்சப் புள்ளி அளவு* | *சித்தி எய்தும் புள்ளி* |
|---|---|---|---|
| 1. மதிநுட்பப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. பொதுப் பரீட்சை (தொழில்நுட்ப மற்றும் விடயதான பரீட்சை) | 1 மணித்தியாலம் | 100 | 40 |

8. **பரீட்சை.-** (i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

(ii) விண்ணப்பதாரர் தான் விரும்பும் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம்.

(iii) விண்ணப்பித்த மொழிமூலத்தை பரீட்சையின்போது எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(iv) பரீட்சைக் கட்டணம் 400 ரூபா.

(v) கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரிற்கு வழங்கப்படுகின்ற பேராதனையில் அமைந்துள்ள தபால் கந்தோரில் மாற்றத்தக்கவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட காசுக் கட்டளையினை உரிய இடத்தில் ஒட்டி அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(vi) *பாடத்திட்டம் :*

(அ) மதிநுட்பப் பரீட்சை.- இதில் விண்ணப்பதாரர் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

(ஆ) பொதுப் பரீட்சை.- (தொழில்நுட்ப மற்றும் விடயதான பரீட்சை).-

(i) இலங்கையில் விவசாய மற்றும் கால்நடைத்துறைக்குக் கிடைக்கப்பெறும் வளங்கள் அதன் சிறப்பம்சங்கள், தற்போதைய நிலைமை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள்.

(ii) இலங்கை கால்நடை உற்பத்தித் துறையில், உற்பத்தி அளவு மற்றும் சந்தைப்படுத்தல் முறைமை, கால்நடை வளர்ப்பின் பங்கு, அவற்றின் இட அமைவு மற்றும் பரம்பல்.

(iii) பண்ணை விலங்குகளின் இனப்பெருக்கத்தின் பொருட்டு பயன்படுத்தப்படும் முறைகள்.

(iv) தொற்றும் விலங்கு நோய்கள், விலங்கு நோய்களின் ஒழிப்பு, நோயுற்ற விலங்குகளின் எச்சங்களைச் சேகரித்தல் மற்றும் கொண்டு செல்லுதல்.

(v) ஒன்றிணைந்த பண்ணை முறைமையின் மீள் பயன்பாட்டு முறைகள்.

(vi) கால்நடை வளர்ப்பு மற்றும் அது சார்ந்த கைத்தொழில், பால் தயாரிப்பு, இறைச்சி தயாரிப்பு, கால்நடை உணவு உற்பத்தி.

(vii) கால்நடை வளர்ப்பு செயன்முறையுடன் தொடர்புற்ற வருமான செலவினங்களைக் கணிக்கும் ஒழுங்கு முறை, கணக்குப் பகுப்பாய்வு, விலங்குப் பண்ணைத் திட்டம்.

(viii) விஞ்ஞான ரீதியான தகவல்களைப் பரப்புதல், அவற்றின் ஆக்கத்திறன் தொடர்புற்ற முறைகளின் பிரயோகம்.

9. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் முறை.-** (i) இவ்வறிவித்தலுக்கு அமைவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 8 1/ 2" x 12" அளவிலான ஏ4 கடதாசியில் இரு பக்கங்களையும் பிரயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2017.12.31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர்" பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு.-** (i) அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) சகல தேவைப்பாடுகளினையும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடுகையின்போது விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. பரீட்சை நடாத்தப்படும் திகதி செய்திப் பத்திரிகையில் அறிவிக்கப்படும். விண்ணப்பதாரருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆரம்பிப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் கிடைக்கப்பெறாதவிடத்து பின்வரும் விபரங்களுடன் உடனடியாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்புகொள்க :

(அ) விண்ணப்பகாரரது முழுப்பெயர் ;

(ஆ) முகவரி ;

(இ) விண்ணப்பம் தபாலிட்ட திகதி, பதிவு இலக்கம், தபாற் பணிமனை

10. விண்ணப்பதாரர் பின்வரும் ஆவணங்களில் நிழற்படப்பிரதியினை (Photo copy) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

**விண்ணப்பதாரரது ஆளடையாளம்.-** பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;

(ஆ) ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கடவுச்சீட்டு.

**பிழையான தகவல்களை வழங்குதல்.-** இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரர் உரிய தகைமைகளைக் கொண்டிராமை கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலாயினும் அவருடைய விண்ணப்பத் தகைமையினை இரத்துச்செய்யப்பட இடமுண்டு. விண்ணப்பதாரர் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் ஏதாவது பிழையானது எனத் தெரிந்திருந்தும் சமர்ப்பித்து இருப்பாராயின் அவர் சேவையில் நின்றும் நிறுத்தப்படுவதற்கு இடமுண்டு.

இவ்வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனை மற்றும் பரீட்சார்த்தகர்களுக்கான விதிகள், அறிவுறுத்தல்கள் என்பவற்றின்பால் உங்கள் கவனத்தை ஈர்ப்பதுடன் அவற்றினைப் பின்பற்றவும்.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையே ஏதும் பொருந்தாத் தன்மை காணப்படுமிடத்து சிங்கள மொழி மூல அறிவித்தலே ஏற்புடையதாகும்.

12. இவ்வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது தொடர்பிலும் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளும் எண்ணிக்கை தொடர்பிலும் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும். அதுவே இறுதித் தீர்வாகும்.

டாக்டர் ஆர். எம். ஆரியதாஸ,
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,
பேராதனை,
2017, நவெம்பர் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சு**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

***இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2018***

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : [ ]

[ ] (அலுவலக உபயோகத்திற்கு)

சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04
(உரிய இலக்கத்தை அடைப்பில் எழுதுக)

1. பெயர் :
 1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.
 (உதாரணம் : SILVA, B.A.)

 1.2 முழுப்பெயர் (தமிழில்) :----.

 1.3 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

2. (i) முகவரி :
 தனிப்பட்ட :----.
 அலுவலக :----.
 தபால் முகவரி :----.

 (ii) தொலைபேசி இலக்கம் :
 கையடக்கத் தொலைபேசி :----. இல்லத் தொலைபேசி :----.

3. 3.1 பால் :
 ஆண் [ ]
 பெண் [ ]
 (உரிய அடைப்பினுள் அடையாளம் இடுக)

 3.2 பிறந்த திகதி :

 ஆண்டு : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

 3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது-

 வருடங்கள் : [ ][ ] மாதங்கள் : [ ][ ] நாட்கள் : [ ][ ]

 3.4 குடியியல் நிலை :

 விவாகமானவர் [ ]

 விவாகமாகாதவர் [ ]
 (உரிய அடைப்பினுள் அடையாளம் இடுக)

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (உ. த.) பரீட்சை-
வருடம் :----.
மாதம் :----.

| பாடம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.2 க. பொ. த. (சா. த.) பரீட்சை-
வருடம் :----.
மாதம் :----.

| பாடம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.3 (அ) தொழிற்றகைமை பெறப்பட்ட நிறுவனம் :----.
(ஆ) தொழிற்றகைமை பெற்ற திகதி :----.

5. தற்போதைய தொழில் மற்றும் முன்னைய நியமனங்கள் (இருப்பின்) மாத்திரம் :

| பதவி | நிறுவனம் | முதல் | வரை |
|---|---|---|---|
| | | | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் அலுவலகத்தின் பெயர் :----.
காசுக்கட்டளை இலக்கம் :----.

பரீட்சைக் கட்டணமாக 400 ரூபாவை தீவின் எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்தி
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு மாற்றக்கூடிய அலுவலகம் :- பேராதனை

பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்.

7. இவ்விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவுசெய்த பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பகாரரது கையொப்பம்.

திகதி :----.

(தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

திணைக்களத் தலைவரினது சான்றிதழ் :

இத்திணைக்களத்தில் ................................................. கடமை மேற்கொள்கின்ற திரு./ திருமதி/ செல்வி ............. ............................................ என்பவரால் தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சிக்கப்பட்டது எனவும், அவை சரியானது எனவும், இவ்வுத்தியோகத்தர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாது எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
பதவி முத்திரையைப் பொறிக்கவும்.

பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

12-07

---

**கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சு**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

## இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2018

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் பொருட்டு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பரீட்சை**.- இப்பரீட்சை 2018, பெப்புருவரி மாதம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் கண்டியில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கும் அல்லது இரத்துச்செய்வதற்கும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

3. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக ஆராய்ச்சி உதவியாளர் பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் :

(i) தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுத்தப்படுவார் என்ற நிபந்தனையின் பேரிலேயே உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார்.

(ii) இப்பதவி ஓய்வூதியம் உடையதாகும். உமக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு, தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(iii) ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். அரசாங்க சேவைப்பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவாரேயாயின் அது தொடர்பில் நியமனமானது ஒரு வருட பதில் கடமை காலப் பகுதிக்கு உட்பட்டதாக அமையும். திறந்த ஆட்சேர்ப்பு முறையில் நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அத்தகைய பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர், விதித்துரைத்த முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி எய்துதல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் சகல உத்தியோகத்தர்களும் சேவையில் சேர்ந்துகொண்ட அரச கரும மொழிக்கு மேலாக மற்றைய அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சியை சேவையில் சேர்ந்து 5 வருடத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(v) நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்புரைக்கும் தாபன விதிக்கோவை யின் ஒழுங்குவிதிகளுக்கும் நிதிப்பிரமாணத்திற்கும் அரசாங்கத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அமைச்சு மற்றும் திணைக்களம் என்பவற்றின் பணிப்புரைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

4. **சம்பளத் திட்டம்**.- எம்என்-3-2016ஏ- இலங்கை தொழில்நுட்ப சேவையின் ஆராய்ச்சி உதவியாளர் பதவியின் III ஆம் தரத்தின் ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550. (பொ. நி. சு. 03/ 2016 இற்கு அமைய மாதாந்தம்) இச்சம்பளத் திட்டத்தில் ரூபா 31,040 - 18 x 445 - ரூபா 39,050 சம்பளப் படிமுறையும் இத்தரத்திற்கு உரியதாகும். III ஆம் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் இயைபுடைய வேதன அளவுத் திட்டத்தின் மூன்றாம் வேதன அளவு நிலையை எய்துவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5. **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று வயது 18 இற்கு குறையாமலும் 30 வயதினை விஞ்சிவிடாமலும் இருத்தல் வேண்டும்.

6. **கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற் தகைமைகள்** :

*கல்வித் தகைமைகள்*.- இரசாயன விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் மற்றும் உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களுள் இரண்டு பாடங்களுடன் விஞ்ஞான/ கணித பாடப்பரப்பிற்கு உரிய பாடங்களில் மூன்றில் க. பொ. த. (உ. த.) ப் பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ;

அத்துடன்

சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) ப் பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ;

*தொழிற் தகைமைகள்*.- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற இரு வருட கால்நடை வளர்ப்பு டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

கால்நடை வளர்ப்பு துறைக்கு உரிய தேசிய தொழிற்பயிற்சித் தகைமை (NVQ) 6 மட்டத்தின் தகைமைகளைப் பூரணப்படுத்தி இருத்தல் ;

அல்லது

உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழை வழங்குகின்ற நிறுவனத்திடம் வினவி கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல விதத்திலும் சமமானது என மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- விண்ணப்ப முடிவுத் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ சகல தகைமைகளையும் பெற்றிருக்க வேண்டியதுடன் பெறுபேறுகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

*உடற்தகைமை*.- பதவியில் கடமையை மேற்கொள்வதற்குப் போதிய உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டவராக இருப்பதுடன் உடற்றகுதி வைத்திய பரிசீலனைச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

*ஏனைய தகைமைகள்* :

(i) சகல விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) சகல விண்ணப்பதாரரும் சிறந்த குணவியல்பு உள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(iii) சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டு போட்டிப் பரீட்சைக்கு அமருவதன் பொருட்டு தேவையான தகைமைகளைக் கொண்டிருப்பது என ஏற்றுக்கொள்வது விண்ணப்பதாரர் உரிய சகல தகைமைகளையும் மற்றும் உரிய வயதெல்லை என்பவற்றை விண்ணப்பக் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்படும் இறுதித் திகதி அன்று சகலவிதத்திலும் தகைமைகளைப் பூர்த்திசெய்து இருந்தால் மாத்திரமேயாகும்.

7. **ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை என்பவற்றின் பெறுபேற்றிற்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையுடையோர் தெரிவுசெய்யப்படுவர்.

*எழுத்துமூலப் பரீட்சை*.- இப்பரீட்சை வினாப்பத்திரம் 2 இனைக் கொண்டமைந்ததாகும் :

| பாடங்கள் | நேரம் | உச்சப் புள்ளிகள் அளவு | சித்தி எய்தவேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. மதிநுட்பப் பரீட்சை | 1 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. பொதுப் பரீட்சை (தொழில்நுட்ப மற்றும் விடயவிதான பரீட்சை) | 1 மணித்தியாலம் | 100 | 40 |

8. **பரீட்சை :**

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

(ii) விண்ணப்பதாரர் தான் விரும்பும் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம்.

(iii) விண்ணப்பித்த மொழிமூலத்தை பரீட்சையின்போது எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(iv) பரீட்சைக் கட்டணம் 400 ரூபா.

(v) கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரிற்கு வழங்கப்படுகின்ற பேராதனையில் அமைந்துள்ள தபால் கந்தோரில் மாற்றத்தக்கவாறு பெற்றுக் கொள்ளப்பட்ட காசுக் கட்டளையினை உரிய இடத்தில் ஒட்டி அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(vi) பாடத்திட்டம் :

(அ) மதிநுட்பப் பரீட்சை.- இதில் விண்ணப்பதாரர் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

(ஆ) தொழில்நுட்பவியல் :

(i) ஆய்வுகூட உபகரணங்களை இனங்காணுதலும் அவற்றினை பராமரித்தலும் ;

(ii) நோயைக் கண்டறியும் பொருட்டு செய்யப்படவேண்டிய ஆய்வு முறைகள் :
நோயியல் (Pathology)
ஒட்டுண்ணியியல் (Parasitology)
நுண்ணுயிரியல் (Microbiology)
நீர்ப்பாயவியல் (Serology)
போஷணை (Nutrition)

(iii) தரத்தினை நிர்ணயிக்க மேற்கொள்ளப்படும் ஆய்வு முறைகள் :
பௌதீகப் பரிசோதனை
இரசாயனப் பரிசோதனை
புலன் பரிசோதனை

(iv) ஆய்வுகூடத்தை கவனமாகப் பேணுதல், கிருமி அழித்தல்.

(v) மாதிரி பெற்றுக்கொள்ளல், களஞ்சியப்படுத்தல், கொண்டுசெல்லல்.

9. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய முறை**.- (i) இவ்வறிவித்தலுக்கு அமைவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக 8 1/ 2" x 12" அளவிலான ஏ4 கடதாசியில் இரு பக்கங்களையும் பிரயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2017.12.31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, கெடம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- (i) அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) சகல தேவைப்பாடுகளினையும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் அனுப்பும்போது விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. பரீட்சை நடாத்தப்படும் திகதி பத்திரிகை அறிவித்தல் மூலம் விளம்பரப்படுத்தப்படும். விண்ணப்பதாரருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆரம்பிப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் கிடைக்கப்பெறாதவிடத்து பின்வரும் விபரங்களுடன் உடனடியாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்புகொள்க :

(அ) விண்ணப்பகாரரது முழுப்பெயர் ;
(ஆ) முகவரி ;
(இ) விண்ணப்பம் தபாலில் அனுப்பிய திகதி, பதிவு இலக்கம், தபால் அலுவலகம்.

10. விண்ணப்பதாரர் பின்வரும் ஆவணங்களின் நிழற்படப்பிரதியினை (Photo copy) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

**விண்ணப்பதாரரது ஆளடையாளம்**.- பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ஆ) ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கடவுச்சீட்டு (பரீட்சைத் தினத்திற்கு முன்னர் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

**பிழையான தகவல்களை வழங்குதல்**.- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரர் உரிய தகைமைகளைக் கொண்டிராமை கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலாயினும் அவருடைய விண்ணப்பத் தகைமையினை இரத்துச்செய்ய இடமுண்டு. விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் ஏதாவது பிழையானது எனத் தெரிந்திருந்தும் சமர்ப்பித்து இருப்பாராயின் அவர் சேவையிலிருந்து நிறுத்தப்படுவதற்கு இடமுண்டு.

இவ்வர்த்தமானப் பத்திரிகையில் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனை மற்றும் பரீட்சார்த்தகர்களுக்கான விதிகள், அறிவுறுத்தல்கள் என்பவற்றின்பால் உங்கள் கவனத்தை ஈர்ப்பதுடன் அவற்றினைப் பின்பற்றவும்.

11. இவ்வர்த்தமான அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையே ஏதும் பொருந்தாத தன்மை காணப்படுமிடத்து சிங்கள மொழி மூல அறிவித்தலே ஏற்புடையதாகும்.

12. இவ்வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது தொடர்பிலும் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் எண்ணிக்கை போன்றவற்றில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும். அதுவே இறுதித் தீர்வாகும்.

டாக்டர் ஆர். எம். ஆரியதாஸ,
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,
பேராதனை,
2017, நவெம்பர் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கிராமிய பொருளாதாரம் பற்றிய அமைச்சு**

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

***இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர் உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2018***

| பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : |
|---|

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04
(உரிய இலக்கத்தை அடைப்பில் எழுதுக)

1. பெயர் :
1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.
(உதாரணம் : SILVA, B.A.)

1.2 முழுப்பெயர் (தமிழில்) :----.

1.3 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

2. (i) முகவரி :
தனிப்பட்ட :----.
அலுவலக :----.
தபால் முகவரி :----.

(ii) தொலைபேசி இலக்கம் :
கையடக்கத் தொலைபேசி :----. இல்லத் தொலைபேசி :----.

3. 3.1 பால் :

ஆண் ☐
பெண் ☐
(உரிய அடைப்பினுள் அடையாளம் இடுக)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது-

வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

3.4 குடியியல் நிலை :

விவாகமானவர் ☐
விவாகமாகாதவர் ☐
(உரிய அடைப்பினுள் அடையாளம் இடுக)

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (உ. த.) பரீட்சை :
வருடம் :----.
மாதம் :----.

| பாடம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.2 க. பொ. த. (சா. த.) பரீட்சை :
வருடம் :----.
மாதம் :----.

| பாடம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.3 தொழிற்றகைமை பெறப்பட்ட நிறுவனம் :----.
4.4 தொழிற்றகைமை பெற்ற வருடம் :----.

5. தற்போதைய தொழில் மற்றும் முன்னைய நியமனங்கள் (இருப்பின்) மாத்திரம் :

| பதவி | நிறுவனம் | முதல் | வரை |
|---|---|---|---|
| | | | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் அலுவலகத்தின் பெயர் :----.
காசுக்கட்டளை இலக்கம் :----.

| பரீட்சைக் கட்டணமாக 400 ரூபாவை தீவின் எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்தி கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு மாற்றக்கூடிய அலுவலகம் :- பேராதனை<br><br>பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும். |
|---|

7. இவ்விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன் தெரிவுசெய்த பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :----.

(தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

திணைக்களத் தலைவரினது சான்றிதழ் :

இத்திணைக்களத்தில் .................................................. கடமை மேற்கொள்கின்ற திரு./ திருமதி/ செல்வி .................... ...................................... என்பவரால் தரப்பட்டுள்ள விபரங்கள் பரீசிக்கப்பட்டது எனவும், அவை சரியானது எனவும், இவ்வுத்தியோகத்தர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/ முடியாது எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

(பதவி முத்திரையைப் பொறிக்கவும்).

பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

*12-08*

---

**ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு**

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

**ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தர தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தர தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவியில் நிலவும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதன் பொருட்டு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரரது வயது 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதினை விஞ்சிவிடாமலும் இருத்தல் வேண்டும். அதற்கமைய வயது தொடர்பாக தகைமையைப் பூரணப்படுத்துவது விண்ணப்பதாரரது பிறந்த தினம் 2000.01.08 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1988.01.08 ஆந் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னர் அமைந்திருந்தால் மாத்திரமேயாகும்.

3. இப்பதவியின் பொருட்டு 2020.01.01 ஆந் திகதிக்கு MN 3 - 2016 இற்கு அமைய ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550 மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இற்கமைய வேதனம் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு தகுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சகல அடிப்படைக் கல்வித் தகைமையையும் மற்றும் தொழிற் தகைமைகளையும் பெற்றிருப்பது கட்டாயமாகும்.

**கல்வித் தகைமைகள்**.- க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அத்துடன்

இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதிகவியல், கட்டட தொழில்நுட்பவியல், பொறியியலாளர் தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பவியல் பொருட்டான விஞ்ஞானப் பாடங்கள் (02) இரண்டுடன் பாடங்கள் (03) மூன்றில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தொழிற் தகைமைகள் :**

(i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி வழங்கும் அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா ;

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையின் முதலாம் பகுதியை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தி இருத்தல் ;

அல்லது

(vi) தொழில்துறைக்கு உரியவாறு தேசிய தொழிற்திறன் (NVQ 6) மட்டத்தில் தகைமையைப் பூரணப்படுத்தி இருத்தல் ;

அல்லது

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களிடம் வினவி கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகலவிதத்திலும் சமமானது என இலங்கை தொழில்நுட்ப சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

6. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய ஏ4 (21cm x 29cm) அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி இலக்கம் 1 முதல் 7 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனைய பந்திகள் முறையாக அடுத்தடுத்த பக்கங்களிலும் உட்படுத்தி விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும். அத்துடன் அதற்கு உரிய தகவல்களை தமது கையெழுத்தினாலேயே மிகத் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களைத் தாம் பரீட்சைக்கு அமரும் மொழி மூலத்திலேயே நிரப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் தயார் செய்கையில் அங்கு தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழி மூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலாக ஆங்கிலத்திலும் தமிழ் மொழி மூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலாக ஆங்கிலத்திலும் அமைந்திருத்தல் வேண்டும்.

(இ) முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2018.01.08 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ "பணிப்பாளர் நாயகம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், இல. 1095, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, பேராதனை" எனும் முகவரிக்கு வந்தடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017" எனும் வாசகத்தை தெளிவாக எழுதுதல் வேண்டும்.

(ஈ) இலங்கை வங்கியின் பேராதனை கிளையில் இலக்கம் 7042612 கொண்ட கணக்கிற்கு செலவு வைக்கும் வகையில் பரீட்சைக் கட்டணமாக 500 ரூபாவினை தீவின் எந்தவொரு இலங்கை வங்கியிலும் செலுத்தி இயந்திரப் பொறியிடப்பட்ட பணம் கட்டும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டி அனுப்பிவைத்தல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பதானது பிரயோசனமுடையதாக இருக்கும்.

(உ) இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் சகலவிதத்திலும் பூரணப்படுத்தப்படாத மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். அத்துடன் தபாலிடுகையின்போது காணாமல் போதல், தாமதமாதல் போன்றன தொடர்பில் திணைக்களம் பொறுப்புச் சொல்லமாட்டாது. விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்ப தானது பயன்மிக்கதாகும்.

(ஊ) விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சையின் பொருட்டான அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரரது கையொப்பத்தைச் சான்றுப்படுத்தி இருத்தல் வேண்டும். ஏதாவது நிறுவனத்தில் இருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரராயின் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரியினாலும் அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர்/ கிராம அலுவலர்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி/ நொத்தாரிசு/ முப்படையில் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள பதவிநிலை தரத்தில் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(எ) தற்போது அரசாங்க சேவையில் உள்ளோர் தமது நிறுவனத் தலைவரின் ஊடாக தமது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

7. **பரீட்சை விதிகள்**.- (அ) இப்பரீட்சை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும்.

(ஆ) அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்படுகின்ற விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கு உரிய பற்றுச்சீட்டுடன் விண்ணப்பங்களைச் சரியாகப் பூரணப்படுத்தி அனுப்பி வைக்கின்ற விண்ணப்பதாரருக்கு தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரர் தமக்கு உரிய பரீட்சை நிலையத்தின் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரிக்கு தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்திக்கொண்ட அனுமதிப்பத்திரத்தைக் கையளித்தல் வேண்டும். அனுமதி அட்டை சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சை எழுதுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(இ) பரீட்சைக்கு அமருவதற்காக விண்ணப்பதாரரால் மேற்கொள்ளப்படுகின்ற போக்குவரத்துச் செலவோ அல்லது வேறு எந்த ஒரு கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.

(ஈ) (i) **ஆளடையாளம்**.- பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தோற்றும் சகல பாடவேளைகளிலும் தமது ஆளடையாளத்தினை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கடவுச்சீட்டினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

*(உ) பாடத்திட்டம் :*

| பாட இலக்கம் | பாடங்கள் | நேரம் (மணித்தியாலம்) | உச்சப் புள்ளி அளவு | சித்தியெய்த வேண்டிய புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | மதிநுட்பப் பரீட்சை | 1 | 100 | 40 |
| 2 | பொதுப் பரீட்சை (தொழில்நுட்ப மற்றும் விடயவிதான பரீட்சை | 3 | 100 | 40 |

(i) மதிநுட்பப் பரீட்சை.- இதில் விண்ணப்பதாரர் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

(ii) பொதுப் பரீட்சை (தொழில்நுட்பம் மற்றும் விடயவிதான பரீட்சை) :

* அளவிடை மற்றும் சமப்படுத்துகை தொடர்பான அறிவு ;
* கட்டடப் பொருள் பயன்படுத்தப்படும் முறை மற்றும் தரம் தொடர்பான அறிவு ;
* அத்திவாரம், சுவர் கட்டல், பலகைக் கூரை, தகரக் கட்டு, முகடு, கொங்ரீட் மற்றும் கொங்ரீட் முகடு, அத்திவாரம் மாடிப்படி போன்றன அமையப்பெறும் முறை மற்றும் அமையப் பெறும் சந்தர்ப்பங்கள் ;
* கட்டட நிர்மாணம் மற்றும் மதிப்பீடு தயாரித்தல் ;
* அளவிடையை பெற்றுக்கொள்ளல், மதிப்பீடுகளைத் தயாரித்தல், நிர்மாணங்கள் பொருட்டு தேவையான கட்டடப் பொருட்களின் அளவு மற்றும் ஊழியர் எண்ணிக்கை என்பவற்றை மதிப்பீடு செய்தல் ;

* கட்டமைப்பு (bending movements)/ கருத்திட்ட அதிகாரக் குறிப்பு ;
* மின்சாரம், நீர், மலசலகூட வசதிகள் போன்ற அறிவு.

(ஊ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் தான் விரும்பும் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் உரிய சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.

8. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி வெற்றிடம் நிலவுவது கெட்டம்பேயில் அமைந்துள்ள பிரதான பணிமனையிலாக இருப்பினும் நியமனம் பெறும் உத்தியோகத்தர் தீவின் அமையப்பெற்றுள்ள சகல உப பணிமனைகளையும் உள்ளடக்கியதாக சேவையாற்றுவதற்கு உட்படுத்தப்படுவார் என்ற நிபந்தனையின் பேரிலேயே நியமிக்கப்படுவர்.

(ii) இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுவோர் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.

9. **ஆட்சேர்ப்பு முறை.**- எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையின் பொருட்டு உள்ள சகல வினாப்பத்திரங்களிலும் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரரது மொத்தப் புள்ளிகளின் திறமை வரிசை ஒழுங்கு அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கும் வெற்றிட எண்ணிக்கையின் மும்மடங்குக்கு சமனான தொகையினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. தகைமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர் பரீட்சையின்போது பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

10. போட்டிப் பரீட்சைக்கு அமருவதன் பொருட்டு அனுமதி அட்டை வழங்குவதானது விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகைமையைக் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இவ்வறிவித்தலுக்கு அமைய தகைமைகள் பரீட்சிக்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகளைக் கொண்டிராமை தெரியவரின் நியமனம் பெறுவதற்கு தகைமையற்றவர் எனக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. இங்கு குறிப்பிடப்படாத எந்தவொரு விடயம் தொடர்பிலும் நியமன அதிகாரியினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். சகல விண்ணப்பதாரரும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை ஒழுங்குவிதிகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

12. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையோர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் நம்பிக்கையில் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரருக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலில் மொழிகளுக்கு இடையே ஏதாவது பொருந்தாத் தன்மை காணப்படுமிடத்து அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலே சரியானது எனக் கருத்திற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பேராசிரியர் ஏ. பீ. ஹீண்கென்த,
ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக பயன்பாட்டிற்காக)

**ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தர தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

**Application for the Open Competitive Examination for Recruitment to the Post of Technical Officer (Civil) of Class III of the Sri Lanka Technological Service in the Department of Export Agriculture - 2017**

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

1. பெயர் :

1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில் குறிப்பிடவும்.) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியாக வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னர் அமையுமாறு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : GUNAWARDHANA H. M. S. K.) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.1 அனுமதி அட்டைகளை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 தொலைபேசி இல. (இருப்பின்) :

கையடக்க :

நிலையான :

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

4. பால் :
பெண் - 1
ஆண் - 0

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

5. குடியியல் நிலை :
விவாகமானவர் - 2
விவாகமாகாதவர் - 1

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

6. 6.1 பிறந்த திகதி :
ஆண்டு மாதம் திகதி

6.2 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி அன்று வயது (2018.01.08) :-

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

7. கல்வித் தகைமைகள் :

(அ)க. பொ. த. (சா. த.) பரீட்சை :
வருடம் மற்றும் மாதம் :----.
சுட்டெண் :----.
மொழி மூலம் :----.

| | பாடம் | பெற்ற தரம் | | பாடம் | பெற்ற தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

(ஆ)க. பொ. த. (உ. த.) பரீட்சை :
வருடம் மற்றும் மாதம் :----.
சுட்டெண் :----.
மொழி மூலம் :----.

| | பாடம் | பெற்ற தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

(இ)தொழிற் தகைமைகள் (டிப்ளோமா தகைமை) :

(1) பின்பற்றிய பாடநெறி :----.
(2) பாடநெறியைப் பின்பற்றிய நிறுவனத்தின் பெயர் :----.
(3) சித்தியடைந்த வருடம் :----.
(4) டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி :----.

8.

| | |
|---|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் | |
| திகதி | |
| பணம் செலுத்திய வங்கிக் கிளை | |
| செலுத்திய பணம் | |

பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் ஓர் ஓரத்தினை கழறாதவாறு இங்கு ஒட்டி விடவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்.)

9. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

இவ்விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவுசெய்த பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன். மேலும் இந்தப் பரீட்சை நடாத்துவது தொடர்பில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் முன்வைக்கப்படுகின்ற சட்ட ஒழுங்குவிதிகளுக்கும் நான் இணங்குகின்றேன்.

----,
விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :----.

10. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ........................................ என்பவரை நான் நன்கு அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் ............................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை வைத்தார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் சான்று பகர்கின்றேன்.

----,
கையொப்பத்தைச் சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரது
கையொப்பம்.

சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரது முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ இலச்சினையால் உறுதிப்படுத்தவும்.)
திகதி :----.

11. **விண்ணப்பதாரர் தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர் ஆயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்:**
மேலே தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள திரு./ திருமதி/ செல்வி ........................................ என்பவர் ................. ........................ அமைச்சில்/ திணைக்களத்தில்/ அலுவலகத்தில் சேவை புரிகின்றார் எனவும், அவரது சேவை திருப்திகரமானது எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உள்ளார் எனவும், இப்பரீட்சையின் பெறுபேற்றிற்கு அமைய நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/முடியாது எனவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானது எனவும் சான்று பகர்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.
(அலுவலக முத்திரை)

சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரது முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ இலச்சினையால் உறுதிப்படுத்தவும்.)
திகதி :----.

## ஆரம்ப கைத்தொழில் அமைச்சு

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

### ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்தில் பண்ணை முகாமையாளர், விரிவாக்கல் உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் பொருட்டு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017(2018)

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் பின்வரும் பதவிகளில் நிலவும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதன் பொருட்டு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

| பதவி இலக்கம் | பதவிப் பெயர் |
|---|---|
| 01 | பண்ணை முகாமையாளர் |
| 02 | விரிவாக்கல் உத்தியோகத்தர் |
| 03 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |

2. விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதினை விஞ்சிவிடாமலும் இருத்தல் வேண்டும். அதற்கு அமைய வயது தொடர்பாக தகைமையைப் பூரணப்படுத்துவது விண்ணப்பதாரரது பிறந்த தினம் 2000.01.08 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1988.01.08 ஆந் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னர் அமைந்திருந்தால் மாத்திரமேயாகும்.

3. இப்பதவியின் பொருட்டு 2020.01.01 ஆந் திகதிக்கு MN-3 2016 இற்கு அமைய ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550 மாதாந்த சம்பள அளவுத் திட்டம் உரித்தாகும். பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இற்கு அமைய வேதனம் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்தல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சகல அடிப்படைக் கல்வித் தகைமைகளையும் மற்றும் தொழிற் தகைமைகளையும் பெற்றிருப்பது கட்டாயமாகும்.

**கல்வித் தகைமைகள்.**- சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.)ப் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ;

அத்துடன்

உயிரியல் விஞ்ஞானம், விவசாயம், இரசாயனவியல், பௌதிகவியல், விவசாய தொழில்நுட்பவியல், உயிரியல் தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பவியல் பொருட்டான விஞ்ஞான பாடங்களிலிருந்து (2) இரண்டு பாடங்களுடன் (3) மூன்று பாடங்கள் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

**தொழில் தகைமைகள்.**- விவசாயத் துறைக்கு உரிய கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் ஒரு டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும் :-

(i) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற இரண்டு வருட விவசாய டிப்ளோமா ;

(ii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற விவசாயத் துறைக்குரிய உயர் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

(iii) அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற விவசாயத் துறைக்குரிய தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

(iv) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி வழங்கும் அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற விவசாயத் துறைக்கு உரிய டிப்ளோமா ;

(v) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற விவசாயத் துறைக்கு உரிய டிப்ளோமா ;

(vi) விவசாயத் துறைக்கு உரியவாறு தேசிய தொழிற் திறன் (NVQ) 6 மட்டத்தில் தகைமையைப் பூரணப்படுத்தி இருத்தல் ;

(vii) விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற இரண்டு வருட விவசாய டிப்ளோமா ;

(viii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களிடம் வினவி கருத்துக்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல விதத்திலும் சமமானது என இலங்கை தொழில்நுட்ப சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

6. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய ஏ4 (21cm x 29cm) அளவுடைய தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி இலக்கம் 1 முதல் 7 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனைய பந்திகள் முறையாக அடுத்தடுத்த பக்கங்களிலும் உட்படுத்தி விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டும். அத்துடன் அதற்கு உரிய தகவல்களை தமது கையெழுத்தினாலே மிகத் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களைத் தாம் பரீட்சைக்கு அமரும் மொழி மூலத்திலேயே நிரப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) ஒரு விண்ணப்பதாரருக்கு ஒரு பதவிக்கு அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். அத்துடன் அதன் நிமித்தம் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறான விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டியதில்லை. அனுப்பி வைக்கப்படுகின்ற விண்ணப்பங்களில் தெளிவாக பதவியின் பொருட்டு விண்ணப்பம் செய்யும் பதவிகளின் முன்னுரிமையை கீழே தரப்பட்டுள்ள தொடர் இலக்கத்துடன் குறிப்பிடப்படுதல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பம் செய்யப்பட்ட பதவிகளின் விருப்பத் தெரிவு வரிசையினைப் பின்னர் மாற்றம் செய்ய முடியாது :

| பதவி இலக்கம் | பதவிப் பெயர் | தொடர் இலக்கம் |
|---|---|---|
| 01 | பண்ணை முகாமையாளர் | 001 |
| 02 | விரிவாக்கல் உத்தியோகத்தர் | 002 |
| 03 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 003 |

* **உதாரணம் :**

1 ஆவது விருப்பத் தெரிவாக விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவியும், 2 ஆவது விருப்பத் தெரிவாக தொழில் நுட்ப உத்தியோகத்தர் பதவியும், 3 ஆவது விருப்பத் தெரிவாக பண்ணை முகாமை பதவிக்கும் விண்ணப்பம் செய்வதற்கு எதிர்பார்க்கின்ற விண்ணப்பதாரர் ஒருவர் அந்தப் பதவிகளுக்கு உரியவாறான தொடர் இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தில் 2 ஆவது அட்டவணையில் தொடர் இலக்கத்தைக் குறிக்கும் நிரலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு காட்டப்படுதல் வேண்டும் :

| பதவி இலக்கம் | விருப்பத் தெரிவு முன்னுரிமை | பதவிப் பெயர் | தொடர் இலக்கம் |
|---|---|---|---|
| 01 | 1 ஆவது விருப்பத் தெரிவு | விரிவாக்கல் உத்தியோகத்தர் | 002 |
| 02 | 2 ஆவது விருப்பத் தெரிவு | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 003 |
| 03 | 3 ஆவது விருப்பத் தெரிவு | பண்ணை முகாமையாளர் | 001 |

(இ) விண்ணப்பம் தயார் செய்கையில் அங்கு தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயரை சிங்கள மொழி மூல விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலாக ஆங்கிலத்திலும் தமிழ் மொழிமூல விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கும் மேலாக ஆங்கிலத்திலும் அமைந்திருத்தல் வேண்டும்.

(ஈ) முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2018.01.08 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இலக்கம் 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை உள்ளீட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைத் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

(உ) கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பம் செய்கின்ற பதவிகளின் எண்ணிக்கைக்கு அமைய உரியவாறான பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 2003-02-13 இன்கீழ் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் அமையப்பெற்றுள்ள எந்த ஒரு தபால் பணிமனையிலும்/ உப தபால் பணிமனையிலும் காசினைச் செலுத்தி விண்ணப்பதாரரது பெயரில் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பற்றுச்சீட்டை அங்கு ஒரு ஓரத்தின் ஊடாக விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். அந்த பற்றுச்சீட்டின் ஒளிப்படப் பிரதியை (Photocopy) தம்வசம் வைத்திருப்பதானது பெரிதும் பிரயோசனமாக அமையும். இந்தப் பரீட்சைக் கட்டணங்களுக்கும் மேலாக எவ்வித அறவீடுகளும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்பதை அறியத்தருகின்றேன். பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு காசுக் கட்டளை அல்லது முத்திரை என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அத்துடன் பரீட்சையின் பொருட்டு செலுத்திய கட்டணம் எவ்விதக் காரணத்திலும் மீளச் செலுத்தப்பட மாட்டாது அல்லது வேறு ஒரு பரீட்சையின் நிமித்தம் அதனை மாற்றம் செய்யவும் முடியாது.

| விண்ணப்பம் செய்யும் பதவிகளின் எண்ணிக்கை | பரீட்சைக் கட்டணம் |
|---|---|
| பண்ணை முகாமையாளர் மற்றும்/ அல்லது விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு | ரூபா 600 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு | ரூபா 600 |
| பண்ணை முகாமையாளர் மற்றும்/ அல்லது விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவி மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு | ரூபா 900 |

(ஊ) இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் சகலவிதத்திலும் பூரணப்படுத்தப்படாத மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். அத்துடன் தபாலிடுகையின்போது காணாமல் போதல், தாமதமாதல் போன்றன தொடர்பில் திணைக்களம் பொறுப்புச் சொல்ல மாட்டாது. ஆகவே, விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைப்பதற்கு முன்னர் விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய உள்ளதா எனவும் மற்றும் சகல தகவல்களையும் உட்படுத்தி விண்ணப்பப்படிவம் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பிலும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அவ்விடயங்கள் விண்ணப்பத்தில் உட்படுத்தப்பட்டு பற்றுச்சீட்டைக் கழறாதவாறு ஒட்டப்பட்டுள்ளதா என்பது பற்றியும் மீள கவனத்திற் கொள்ளுமாறு அறியத்தருகின்றேன். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் ஒளிப்படப் பிரதியையும் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் ஒளிப்படப் பிரதியையும் தம்வசம் வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும்.

(எ) விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சையின் பொருட்டான அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பக்காரரது கையொப்பத்தைச் சான்றுப்படுத்தி இருத்தல் வேண்டும். ஏதாவது நிறுவனத்தில் இருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரராயின் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரியினாலும் அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரர் தமது கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், கிராம அலுவலர், சமாதான நீதவான், சட்டத்தரணி, நொத்தாரிசு, முப்படை அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ரூபா 2,40,360 அல்லது அதற்கும் மேலான அல்லது வருடாந்த ஒருங்கிணைந்த வேதனம் பெறுகின்ற அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள பதவிநிலை தரத்தில் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரரது கையொப்பம் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஏ) தற்போது அரசாங்க சேவையில் உள்ளோர் தமது நிறுவனத் தலைவரின் ஊடாக தமது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

* பிழையான தகவல்கள் பொருட்டான தண்டனை.- விண்ணப்பப்படிவத்தை நிரப்புகையில் மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய விண்ணப்பதாரர் எவரேனும் ஒருவர் தகைமையற்றவர் எனத் தெரியவந்தால் அவர் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது ஏதாவது சந்தர்ப்பத்தில் அவரது பரீட்சார்த்தத் தன்மை நிராகரிக்கப்படும்.

7. **பரீட்சை முறை :**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பம் செய்துள்ளனர் எனும் எடுகோளின்கீழ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள் உள்ள விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கு உரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்தி அனுப்பி வைக்கப்படுகின்ற விண்ணப்பதாரருக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் பரீட்சையின் பொருட்டு அமருகின்ற முதலாவது நாளிலேயே தமக்கு உரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தி அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்காத எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் பரீட்சையில் அமருவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

(ஆ) இந்தப் பரீட்சை 2018, மாச்சு மாதம் கொழும்பில் மாத்திரம் நடைபெறும். பரீட்சைத் தினத்திற்கு 5 நாட்களுக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்காத விண்ணப்பதாரர் கீழே தரப்பட்டுள்ள விபரங்களைச் சமர்ப்பித்து தாமதியாது, "பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளையுடன் தொடர்புகொள்ள வேண்டும்.

விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கையில் விண்ணப்பதாரரது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பம் செய்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு விசாரணை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரரினால் தம்வசம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பம் பதிவுத் தபாலிட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்து இருப்பது சிறந்ததாகும். கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின் தொலைநகலின் ஊடாக அனுமதிப்பத்திரத்தின் பிரதியை பெற்றுக்கொள்வதற்காக உங்களது தொலைநகல் இலக்கத்தையும் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களை உட்படுத்திய வேண்டுகோள் கடிதத்தை தொலைநகலின் ஊடாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்து விசாரிப்பது சிறந்ததாகும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை தம்வசம் வைத்திருப்பது மிகவும் பிரயோசனமாக அமையும் :-

(i) பரீட்சையின் பெயர் ;

(ii) விண்ணப்பதாரரது முழுப்பெயர் ;

(iii) முகவரி ;

(iv) விண்ணப்பம் பதிவுசெய்யப்பட்ட திகதி, பதிவுசெய்யப்பட்ட தபால் பணிமனை மற்றும் இலக்கம் ;

(v) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம், திகதி மற்றும் தபால் பணிமனை.

(இ) பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரரால் மேற்கொள்ளப்படுகின்ற போக்குவரத்துச் செலவோ அல்லது வேறு எந்த ஒரு கொடுப்பனவும் வழங்கப்பட மாட்டாது.

(ஈ) *ஆளடையாளம்.*- பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தோற்றும் சகல பாட வேளையிலும் தமது ஆளடையாளத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு,

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ; அல்லது
(ii) ஏற்றுக்கொள்ளக்கூடிய கடவுச்சீட்டினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(உ) *பாடத்திட்டம்.*- பண்ணை முகாமையாளர் மற்றும் விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவி ஆகிய இரண்டின் பொருட்டும் நடாத்தப்படுவது ஒரு எழுத்துப் பரீட்சையாகும்.

| பாட இலக்கம் | பாடங்கள் | நேரம் (மணி) | உச்சப் புள்ளி | சித்தியெய்தும் புள்ளி | உரியவாறான பதவி |
|---|---|---|---|---|---|
| 01 | மதிநுட்பப் பரீட்சை | 01 | 100 | 40% | சகல பதவிகளுக்கும் |
| 02 | பொதுப் பரீட்சை I (தொழில்நுட்ப மற்றும் விடயவிதான பொதுப் பரீட்சை) | 03 | 100 | 40% | பண்ணை முகாமையாளர் மற்றும் விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு |
| 03 | பொதுப் பரீட்சை II (தொழில்நுட்ப மற்றும் விடயவிதான பொதுப் பரீட்சை) | 03 | 100 | 40% | தொழில்நுட்ப பதவியின் பொருட்டு |

(i) **விவேகப் பரீட்சை :** (சகல பதவிகளின் பொருட்டும் உரித்தாகும்).- இதில் விண்ணப்பதாரர் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். பல்தேர்வு மற்றும் சுருக்கமான விடை எழுதுதல் என்பவற்றைக் கொண்ட 50 வினாக்கள் வழங்கப்படுவதுடன் சகல வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) **பொதுப் பரீட்சை I (தொழில்நுட்ப மற்றும் விடயவிதான பொதுப் பரீட்சை).- (பண்ணை முகாமையாளர் மற்றும் விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிகளின் பொருட்டு உரித்தாகும்.)**

* பொதுவான விவசாயம் மற்றும் தத்துவங்கள்.
* பயிர் உற்பத்தி மற்றும் தத்துவங்கள் விவசாய செயன்முறையின் விஞ்ஞானபூர்வ விடயங்கள்.
* மண் மற்றும் உரம், தாவர போசணை, சூழல் தாக்கம்.
* தாவர இனப்பெருக்க முறை.
* நோய் மற்றும் கிருமிநாசினிகளது இயல்பு மற்றும் தாக்கம்.
* விவசாயக் கொள்கை, இறந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால பிரமாணங்கள்.
* ஏற்றுமதி விவசாய பயிர் மிளகு, கருவப்பட்டை, கோப்பி, கொக்கோ, ஏலம், கிராம்பு, சாதிக்காய், வெற்றிலை, பாக்கு போன்றவற்றிற்கு உரிய தாவரவியல் விஞ்ஞான விடயங்கள் காலநிலை காரணிகள், உரத் தாக்கம் மற்றும் போசணை, நோய் மற்றும் கிருமிநாசனி கட்டுப்பாடு, அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம்.
* ஏற்றுமதி பயிர் உற்பத்தி சந்தைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதிப் பிரமாணங்கள்.
* சேதன விவசாயம்.
* பண்ணை நிர்வாகம், செடி மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி மற்றும் செடி வளர்ப்பு.
* விவசாய விரிவாக்கல் முறை மற்றும் விரிவாக்கல் அமைப்பு.

(iii) **பொதுப் பரீட்சை II** (தொழில்நுட்ப மற்றும் விடயவிதான பொதுப் பரீட்சை).- தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு உரித்தாகும்.)

• விவசாயம் தத்துவம்

* இலங்கையில் காலநிலை வலயம் மற்றும் பயிர் உற்பத்தி தொடர்பில் அவற்றின் தாக்கம்.
* மண் வகை, மண்ணரிப்பு பாதுகாப்பு, தாவரப் போசணை மற்றும் நீர் பாதுகாப்பு.
* தாவர இனப்பெருக்கம், நாற்றுமேடை பராமரிப்பு மற்றும் இழைய வளர்ப்பு.
* விவசாயம் மற்றும் சூழல்.
* தோட்டச் செய்கை, களப் பயிர்ச்செய்கை, கலப்பு பயிர்ச்செய்கை மற்றும் விவசாய பயிர்ச்செய்கை.
* அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம்.
* ஏற்றுமதி விவசாய பயிர்ப்பொருள் உணர்த்தல், இனப்பெருக்கம், கள ஸ்தாபகம், பராமரிப்பு, நோய் பீடை கட்டுப்பாடு மற்றும் அறுவடை செய்தல்.
* பண்ணை பராமரிப்பு மற்றும் திட்டமிடல் செய்தல்.
* இலங்கையில் விவசாயத் துறை அபிவிருத்தி மற்றும் அது தொடர்பாக அரசாங்க மற்றும் தனியார் துறையினது பங்களிப்பு
* ஆய்வுகூட உபகரணங்களை அறிந்துகொள்ளல், பயன்பாடு மற்றும் சுத்திகரிப்பு மற்றும் இரசாயனப் பொருட்களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துதல், களஞ்சியப்படுத்தி வைத்தல்.

(ஊ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் உரிய சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தைப் பின்னர் மாற்றம் செய்ய முடியாது.

8. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுத்தப்படுவார் என்ற நிபந்தனையின் பேரிலேயே நியமிக்கப்படுவர்.

(ii) இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுவோர் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.

9. *ஆட்சேர்ப்பு முறை.*- எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையின் பொருட்டு உள்ள சகல வினாப்பத்திரங்களிலும் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரரது மொத்தப் புள்ளிகளின் திறமை வரிசை ஒழுங்கு அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கும் வெற்றிட எண்ணிக்கைக்குச் சமனான தொகையினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. தகைமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர் பரீட்சையின்போது பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். சகல ஆட்சேர்ப்புகளையும் செய்ததன் பின்னர் ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் ஏனைய விண்ணப்பதாரர்களது புள்ளிகளை வெளியிடுமாறு கேட்டுக்கொண்டதன் பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரருக்கும் தாம் பரீட்சையின்போது ஒவ்வொரு பாடங்களிலும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் மற்றும் மொத்தப் புள்ளிகள் என்பன உள்ளடங்கிய பெறுபேற்றினை தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருக்கும் பெற்றுக்கொடுப்பதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

10. போட்டிப் பரீட்சைக்கு அமருவதன் பொருட்டு அனுமதி அட்டை வழங்குவதானது விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகைமையைக் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இவ்வறிவித்தலுக்கு அமைய தகைமைகள் பரீட்சிக்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் கொண்டிராமை தெரியவரின் நியமனம் பெறுவதற்குத் தகைமையற்றவர் எனக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. இங்கு குறிப்பிடப்படாத எந்தவொரு விடயம் தொடர்பிலும் நியமன அதிகாரியினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். சகல விண்ணப்பதாரரும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

12. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையோர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் நம்பிக்கையில் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரருக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். பரீட்சையை நடாத்துவது மற்றும் பெறுபேற்றினை வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கு அமைய பரீட்சை விண்ணப்பதாரர் உட்படுதல் வேண்டும். அந்த சட்டதிட்டங்களை மீறுவோர்களுக்கு எதிராக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலில் மொழிகளுக்கு இடையே ஏதாவது பொருந்தாத் தன்மை காணப்படுமிடத்து அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலே சரியானது என கருத்திற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பேராசிரியர் ஏ. பீ. ஹீண்கெண்த,
ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

**ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் III ஆம் தரத்தில் பண்ணை முகாமையாளர், விரிவாக்கல் உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

**Application for the Open Competitive Examination for Recruitment to the Post of Farm Manager, Extention Officer, Technological Officer of Class III of the Sri Lanka Technological Service in the Department of Export Agriculture - 2017**

1. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

2. விண்ணப்பிக்கும் பதவி/ பதவிகள்.- விண்ணப்பம் செய்கின்ற பதவி அல்லது பதவிகளின் முன்னுரிமைக்கு அமைய குறிப்பிடப்படல் வேண்டும். ஒரு பதவிக்கு மாத்திரம் விண்ணப்பிப்பதாயின் அப்பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும் :

| தொடர் இலக்கம் | விருப்பத் தெரிவு முன்னுரிமை | பதவிப் பெயர் | தொடர் இலக்கம் |
|---|---|---|---|
| 01 | 1 ஆவது விருப்பத் தெரிவு | | |
| 02 | 2 ஆவது விருப்பத் தெரிவு | | |
| 03 | 3 ஆவது விருப்பத் தெரிவு | | |

3. பெயர் :

3.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில் குறிப்பிடவும்.) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

3.2 இறுதியாக வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னர் அமையுமாறு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : GUNAWARDHANA H. M. S. K.)

3.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

4. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

4.1 அனுமதி அட்டையை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

4.2 தொலைபேசி இல. (இருப்பின்) :

கையடக்க : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

நிலையான : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

6. பால் :
பெண் - 1
ஆண் - 0 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

7. குடியியல் நிலை :
விவாகமானவர் - 2
விவாகமாகாதவர் - 1 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

8. 8.1 பிறந்த திகதி :

ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

8.2 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று (2018.01.08) வயது :

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

9. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சை :
வருடம் மற்றும் மாதம் :----.
சுட்டெண் :----.
மொழி மூலம் :----.

| | பாடம் | பெற்ற தரம் | | பாடம் | பெற்ற தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை :
வருடம் மற்றும் மாதம் :----.
சுட்டெண் :----.
மொழி மூலம் :----.

| | பாடம் | பெற்ற தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

(இ)தொழிற் தகைமைகள் (டிப்ளோமா தகைமை) :

| டிப்ளோமா மற்றும் நிறுவனத்தின் பெயர் | சித்தியடைந்த வருடம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

10.

| | |
|---|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கம் | |
| திகதி | |
| பணம் செலுத்திய தபால்/ உப தபால் பணிமனை | |
| செலுத்திய பணம் | |

பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் ஒரு ஓரத்தினை கழறாதவாறு இங்கு ஒட்டி விடவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்.)

11. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

இவ்விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என் நான் தெரிவுசெய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவுசெய்த பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை நான் அறிவேன்.
மேலும் இந்தப் பரீட்சை நடாத்துவது தொடர்பில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் முன்வைக்கப்படுகின்ற சட்ட ஒழுங்குவிதிகளுக்கும் நான் இணங்குகின்றேன்.

----,
விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :----.

12. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி .......................................... என்பவரை நான் நன்கு அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் ................................ ஆந் திகதி அவரது கையொப்பத்தை வைத்தார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அப்பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் சான்று பகர்கின்றேன்.

----,
கையொப்பத்தைச் சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரது கையொப்பம்.

சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரது முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ இலச்சினையால் உறுதிப்படுத்தவும்.)
திகதி :----.

13. விண்ணப்பதாரர் தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர் ஆயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

மேலே தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள திரு./ திருமதி/ செல்வி .......................................... என்பவர் ................ ........................ அமைச்சில்/ திணைக்களத்தில்/ அலுவலகத்தில் சேவை புரிகின்றார் எனவும், அவரது சேவை திருப்திகரமானது எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உள்ளார் எனவும், இப்பரீட்சையின் பெறுபேற்றிற்கு அமைய நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/முடியாது எனவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானது எனவும் சான்று பகர்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரது முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ இலச்சினையால் உறுதிப்படுத்தவும்.)
திகதி :----.

12-292

---

## சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுநர்களின் சேவைக்கு வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்காக பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2017

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுநர் சேவையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு பாடநெறிகளுக்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. பதவிக்கான கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

| குறியீட்டு இல. | வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு பாடநெறி | பூர்த்திசெய்யப்பட வேண்டிய பட்டம் |
|---|---|---|
| 1. | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | விஞ்ஞானமாணி மருத்துவ இரசாயனவியலாளர் (BSc.MLS) |
| 2. | மருந்தாளர் | மருந்தாளர் (B. Pharm)<br>விஞ்ஞானமாணி மருந்தாளர் [BSc. (Pharmacy)] |
| 3. | உடற்கூறு சிகிச்சையாளர் | உடற்கூறு சிகிச்சையாளர் (BSc. Physiotheraphy) |
| 4. | கதிரியலாளர் | கதிரியல் சிகிச்சையாளர் (BSc. Radiotheraphy)<br>விஞ்ஞானமாணி கதிரியலாளர் (BSc. Radiography) |

**3. ஏனைய பொதுத் தகைமைகள் :**

(அ) 2018.01.08 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாத 35 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல்.

(ஆ) உரிய பட்டம் செல்லுபடியாகும் திகதி விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாக இருத்தல் வேண்டும்.

(இ) சிறந்த உடல், உள ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

**4. விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இத்தோடு இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கமைவாக ஏ4 அளவு கொண்ட தாளில் (1-9 வரை முதல் பக்கத்திலும், 10-13 வரையான விபரங்களை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்குவதற்கு ஏற்ற முறையில்) விண்ணப்பங்களைத் தயாரிக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தில் "பற்றுச்சீட்டு" எனும் இடத்தில் "இலங்கை வங்கி, தெப்ர பிறேன், இல. 7041318, சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் - பரீட்சைக் கட்டணம் அறவிடல்" எனும் கணக்கிற்கு 300 ரூபாவை வரவு வைத்து பற்றுச்சீட்டைக் கழற்ற முடியாத வகையில் ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டை ஒட்டுவதற்கு முன் அதன் பிரதி ஒன்றை வைத்துக்கொள்ளவும்).

(இ) அரச பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு/ முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது 3,93,684 ரூபாவுக்கு மேற்பட்ட வருட சம்பளம் பெறும் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவிநிலை தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரினால் விண்ணப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பம் 9 x 4 அளவு கொண்ட கடித உறையில் இட்டு, அந்தக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நிறைவுகாண் மருத்துவ சேவைக்குப் பயிலுநர்களாக பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2017" எனவும், உரிய பட்டம் மற்றும் கல்வி ஆண்டு என்பவற்றைக் குறிப்பிட்டு 2018.01.08 ஆந் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர்-நிர்வாகம் 2, சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, 'சுவசிரிபாய', இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

5. அரச அல்லது அரசாங்கத்துடன் இணைந்துள்ள நிறுவனங்களில் கடமையாற்றுபவர்கள் அவர்களது திணைக்களத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு என்பதுடன், உரிய பயிற்சியை சிறப்பாக நிறைவுசெய்தால் அல்லது நிறைவுசெய்ய முடியாதவிடத்து தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் செல்ல முடியாதென்பதை கவனத்தில் கொள்ளவும்.

6. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது என்பதுடன், உரிய தினத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும் இவ்வறிவித்தலுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. ஒவ்வொரு பயிற்சி நெறிகளுக்கும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பட்டதாரிகளில் பட்டம் செல்லுபடியாகும் திகதி (Effective Date) மற்றும் பட்டத்தின் தரத்திற்கான பொது மதிப்பீடு (GPA) அடிப்படையாகக் கொண்டு திறமைப்பட்டியல் தயாரித்து ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இந்த பட்டதாரிகள் இணைத்துக்கொள்வதற்காக இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியான 2016.06.25 இற்குப் பின்னர் பட்டம் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

8. வெற்றிடங்களின் எண்ணிக்கையை விடவும் மேற்பட்ட தொகையினர் இதற்காக விண்ணப்பித்திருப்பின், வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு பாட நெறிகளுக்காக இணைத்துக்கொள்ளும் முகமாக பொது அறிவு மற்றும் உளச்சார்பு தொடர்பாக 1 மணித்தியாலத்தைக் கொண்ட எழுத்துமூல போட்டிப் பரீட்சை நடாத்தி அப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் திறமையின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு சமமான எண்ணிக்கையினர்

இணைத்துக்கொள்ளப்படுவர். விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையின்போது பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் அதன் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) பட்டச் சான்றிதழின் மூலப் பிரதி (விண்ணப்பத்துடன் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை இணைக்கவும்.) ;

(இ) க. பொ. த. (சா. த.), க. பொ. த. (உ. த.) பரீட்சை பெறுபேறுகளின் மூலப் பிரதி ;

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப் பத்திரம்;

(உ) வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரின் துணை ஒப்பமிடப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் (கிராம அலுவலரின் சான்றிதழ்).

9. **பயிற்சியளிக்கும் முறை :-**

| குறியீட்டு இல. | வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்புப் பாடநெறி | பயிற்சிக் காலம் | பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் மொழி |
|---|---|---|---|
| 01 | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | 6 மாதங்கள் | ஆங்கிலம் |
| 02 | மருந்தாளர் 6 மாதங்கள் | ஆங்கிலம் | |
| 03 | உடற்கூற்று சிகிச்சையாளர் | 6 மாதங்கள் | ஆங்கிலம் |
| 04 | கதிரியலாளர் | 6 மாதங்கள் | ஆங்கிலம் |

(i) நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு பாடநெறிகளுக்காக பயிற்சிப் பாடசாலைகளுக்கு இணைத்துக்கொள்ளப்படுவர். பயிற்சிகள், மேற்படி வர்த்தமானி அறிவித்தலில் அந்தந்த கற்கைநெறிகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள மொழிகளில் நடாத்தப்படும்.

(ii) பயிற்சிப் பாடசாலைகளுக்கு உள்வாங்கப்படும் பயிலுனர்கள் பயிற்சிப் பாடசாலைகளின் சட்டதிட்டங்கள் மற்றும் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் காலத்திற்குக்காலம் வெளியிடப்படும் கட்டளைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

(iii) பயிற்சியின் நிறைவில் பயிற்சியை சிறப்பாக நிறைவுசெய்யாத அல்லது வேலை மற்றும் நடத்தை திருப்திகரமற்ற அல்லது தாம் உள்வாங்கப்பட்ட பயிற்சிப் பாடசாலையின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்படத் தவறும் பயிலுநர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்டஈடுகளும் இன்றி பயிற்சி முடிவுக்கு கொண்டு வரப்படும்.

(iv) பயிற்சிக்காலத்தில் பயிலுநர்களுக்கு பொது நிர்வாக சுற்றறிக்கை 03/ 2016 இன் விதிமுறைகளுக்கு அமைய கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

(v) பயிற்சிப் பாடசாலைக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும்போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்தப் பயிற்சியை முழுமையாக நிறைவுசெய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் (5) உரிய பதவியில் சேவையாற்றுவதாகவும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்திற்கும் பிணைக்கும் உடன்படல் வேண்டும். பயிற்சியின்போது பயிற்சியிலிருந்து விலகினால் அல்லது பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால் அல்லது மேற்படி III ஆவது பந்தியின் பிரகாரம் பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று ஐந்து (5) வருடங்கள் உரிய பதவியில் சேவை செய்வதற்குத் தவறினால் பயிற்சிக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவுகள், ஒப்பந்தம் மற்றும் பிணைக்குரிய பணம் அவரினால் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சிற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத் தவறின் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நியதிகள்.-** பயிற்சி முடிவில் பதவியில் நிரந்தர நியமனம் செய்தல்/ செய்யாமல் விடும் தீர்மானம் அச்சந்தர்ப்பத்தில் உள்ள பதவி வெற்றிட அளவினைப் பொருத்ததாகும். அதன் பிரகாரம் உரிய பதவியில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு தீர்மானித்தால் விண்ணப்பதாரி பயிற்சி பெற்ற பாடநெறிக்கு குறித்த பயிற்சி நெறியின் நிபந்தனை மற்றும் வெற்றிடங்களின் அடிப்படையில் குறித்த பதவியில் III ஆம் தரத்திற்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட இல. 1, 2, 3, 4 இல் குறிப்பிடப்பட்ட நிறைவுகாண் மருத்துவ சேவையின் பதவிகளுக்காக பொது நிர்வாக சுற்றறிக்கை 3/ 2016 இன்படி, MT-6-2016 இன் பிரகாரம் ரூபா 32,080 - 445 x 10 - 660 x 11 - 730 x 10 - 750 x 10 - 58,590 எனும் சம்பள நிலை உரித்தாவதுடன், கொடுப்பனவு பொது நிர்வாக சுற்றறிக்கை 03/ 2016 இன் விதிமுறைகளுக்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

11. விண்ணப்பத்தை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் பற்றிய விவரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கவும் பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளும்போதும் நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என நிரூபணமாகினால், சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்துச்செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கறுப்புப் பட்டியலில் அவருடைய பெயர் சேர்க்கப்படுவதுடன், பயிற்சிக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செலவினங்கள் மற்றும் பிணைக்குரிய பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய பயிற்சி நெறியைத் தொடர்வதற்கும் மற்றும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை உறுதிப்படுத்துவதற்கு பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். மருத்துவ பரிசோதனையின்போது தகுதியற்றவராகக் காணப்படுமாயின் விண்ணப்பதாரிகள் பயிற்சியைத் தொடர்வதற்கு தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.

13. மேற்படி இணைத்துக்கொள்ளப்பட்ட சகலரும் அரச ஊழியர்களுக்கான சகல சட்ட திட்டங்களுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் விதிக்கப்படும் கொள்கை ரீதியான விதிமுறைகள், நிதிப்பிரமாணம் மற்றும் ஏனைய சட்டதிட்டங்கள், அரசினால் காலத்திற்குக்காலம் வழங்கப்படுகின்ற சட்டதிட்டங்கள் மற்றும் கட்டளைகள் என்பவற்றிற்கு நீங்கள் கட்டுப்படல் வேண்டும்.

14. பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்படுபவர்களுக்கு பயிற்சிப் பாடசாலைகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இவ்வமைச்சு கட்டுப்படவில்லை. அவ்வாறு வழங்கப்பட்டால் மதிப்பீட்டு வீட்டு வாடகை, நீர் மற்றும் மின்சாரம் போன்றவற்றிற்கு கட்டணம் அறவிடப்படும்.

15. பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளல் தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, சிங்கள மொழியே அதிகாரத்தில் இருக்கும்.

ஜனக சுகததாஸ,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2017, நவெம்பர் 22.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுநர்களின் சேவைக்கு வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்காக பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2017**

விண்ணப்பப்படிவத்தை நிரப்புவதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக வாசிக்கவும்.

* விண்ணப்பிக்கும் பாடநெறி (சிங்களத்தில்/ தமிழில்) :----.
* விண்ணப்பிக்கும் பாடநெறி (ஆங்கிலத்தில்) :----.

| பயிற்சி நெறிக்குரிய குறியீட்டு இலக்கம் (வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம்) |
|---|
| |

1. (அ)முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
(உதாரணம் - A. B. C. SILVA)

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----. (பிரதியொன்றை இணைக்கவும்).

3. தபால் முகவரி :

| சிங்களத்தில்/ தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |

4. (அ)நிரந்தர முகவரி :-

| சிங்களத்தில்/ தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |

(ஆ) தொலைபேசி இலக்கம் :

கையடக்க ☐☐☐☐☐☐☐☐☐☐

நிலையான ☐☐☐☐☐☐☐☐☐☐

(இ) வசிக்கும் மாவட்டம் :-
சிங்களத்தில்/ தமிழில் :..............................................
ஆங்கிலத்தில் :..............................................

(ஈ) நீங்கள் இந்த மாவட்டத்தில் நிரந்தர வதிவிடமுடையவரா ? ஆம்/ இல்லை :..........................................

(உ) ஆம் எனின், எவ்வளவு காலம் ? :......................................

5.பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

2018.01.08 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

6.பால் (பெண்/ ஆண்) :

பெண் ☐ ஆண் ☐

(குறித்த கட்டத்தினுள் ✓ அடையாளமிடுக.)

7.நீங்கள் இலங்கைப் பிரசையா ?

ஆம் ☐ இல்லை ☐

(குறித்த கட்டத்தினுள் ✓ அடையாளமிடுக.)

8.விவாக நிலைமை :

விவாகமானவர் ☐ விவாகமாகாதவர் ☐

(குறித்த கட்டத்தினுள் ✓ அடையாளமிடுக.)

9.கல்வித் தகைமைகள் :-

| தொடர் இல. | பெற்ற பட்டம் | தரம் | சிறப்பு பொது மதிப்பீடு (GPA) பட்டம் செல்லுபடியாகும் திகதி | பல்கலைக்கழகம் | கல்வியாண்டு |
|---|---|---|---|---|---|
| | | | | | |

10. நீங்கள் ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ?

ஆம் ☐ இல்லை ☐

(குறித்த கட்டத்தினுள் ✓ அடையாளமிடுக.)

ஆம் எனில், தயவுசெய்து காரணத்தைக் குறிப்பிடுக :...................................................

11. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நன்கு வாசித்தும் அதிலுள்ள நிபந்தனைகளை நன்கு அறிந்தும் என்னால் இவ்விண்ணப்பப்படிவம் நிரப்பப்பட்டதென்றும் நான் எந்தவொரு முழுநேரப்

பாடநெறியில் ஈடுபடவில்லை என்றும் எனது அறிவுக்கெட்டியவரையில் இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

(ஆ) இங்கு என்னால் கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதாவது பிழையென அல்லது தவறு எனக் காணுமிடத்து நான் சேவையில் இருந்து விலக்கப்படுவேன் என நான் நன்கறிவேன்.

(இ) அத்துடன், இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு எனவும், உரிய பயிற்சியை சிறப்பாக நிறைவுசெய்தால் அல்லது நிறைவுசெய்ய முடியாதவிடத்து எக்காரணத்தைக் கொண்டும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் செல்ல முடியாதென்பதை நான் நன்கறிவேன் எனவும் உறுதிமொழிகின்றேன்.

| |
|---|
| இலங்கை வங்கி, தெப்ர பிறேன் கிளையில், இல. 7041318 எனும் கணக்கிற்கு "சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் - பரீட்சைக் கட்டணம் அறவிடல்" எனும் கணக்கிற்குஉரிய பணத்தைச் செலுத்தி அந்தப் பற்றுச்சீட்டை கழராத விதத்தில் இங்கு ஒட்டவும். |

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிசெய்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி .............................. அவர்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் ........................................... ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையுடன்)

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

13. **விண்ணப்பதாரி அரச ஊழியராயின்/மாகாண அரச சேவை ஊழியராயின் திணைக்களத் தலைவரின் உறுதிமொழி : (பொருத்தமற்றவற்றை வெட்டிவிடவும்.) :**

(i) மேற்படி விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி ............................................ அவர்கள் .......... ....................... இத்திணைக்களத்தில் ........................................................ பதவி வகிக்கின்றார் என உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துவதுடன், இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என அறியத்தருகின்றேன்.

(iii) மேலும், இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு என்பதுடன், உரிய பயிற்சியை சிறப்பாக நிறைவுசெய்தால் அல்லது நிறைவுசெய்ய முடியாதவிடத்து தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் வரமுடியாதென்பதை அவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது என்பதையும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
திணைக்களத் தலைவரின் பதவி முத்திரை :

திணைக்களத் தலைவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

12-216

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**காணி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**விலைமனுக் கோரல்**

பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2018

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல்கள் 2017.12.22ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.

**அட்டவணை**

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்விமனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| மத்திய மாகாணம் | கண்டி | ஹாரிஸ்பத்து | மாகாண நில அளவையாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், கன்னொருவ, பேராதனை. | ஹாரிஸ்பத்து நகருக்கு அண்மையில் | 2018.01.01 |
| ஊவா மாகாணம் | பதுளை | வெலிமடை | மாகாண நில அளவையாளர் நாயகம் ( ஊவா மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயக அலுவலகம், பதுளை | வெலிமடை நகருக்கு அண்மையில் | 2018.01.01 |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :**

அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்றுமதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதிகளைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தவேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நிலஅளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல் - (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2017.12.22 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 05,
2017, நவெம்பர் 17.

**பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2018**

விலைமனுக்கோரல் விண்ணப்பப்படிவம் - 2018

கட்டிட உரிமையாளர் விபரங்கள் -

1. முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. தொலைபேசி இலக்கம் :----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

கட்டிடம் தொடர்பாக-

1. எந்த பிரதேச நிலஅளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது ? :----.
2. மாதாந்த வாடகைத் தொகை :----.
3. தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :----.
4. உரிய நகரத்திலிருந்து தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :----.
5. இடத்தின் விஸ்தீரணம் :----.
6. கட்டிடத்தின் சதுர அடி அளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களும்:----.
7. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.
8. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :----.
9. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி வேலி/.................... ) :----.
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :----.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலை மனு நிலஅளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

12-23

---

**மேல் நீதிமன்றம்- யாழ்ப்பாணம்**

**பகிரங்க கேள்விகள் மூலம் விற்பனை செய்தல்**

கீழே குறிப்பிடப்பட்ட பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான பொருட்களை விற்பனை செய்வது தொடர்பாகக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை 2017.12.27 ஆந் திகதி பி. ப. 12.30 மணி வரை யாழ்ப்பாண மேல் நீதிமன்றக் கணக்குக் கிளையில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 100 ஐ செலுத்தி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பிடப்பட்ட பொருட்களை குறிப்பிட்ட நீதிவான் நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும். வாகனம் தொடர்பான விபரங்களுக்கு மீளளிக்கக்கூடிய கேள்விப் பத்திர வைப்புத் தொகை விபரங்களும் பின்வருமாறு

| | விபரம் | மீளளிக்கக் கூடிய வைப்பு (ரூபா) | பார்வையிடக்கூடிய நீதிவான் நீதிமன்றம் |
|---|---|---|---|
| 1. | பவுண் சங்கிலி (11.6g - 22 கரட்) | 1,000 0 | நீதிவான் நீதிமன்றம், பருத்தித்துறை |
| 2. | T.V.S. மோட்டார் சைக்கிள் | 1,000 0 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம் |
| 3. | Bajaj pulsor மோட்டார் சைக்கிள் | 1,000 0 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம் |

| விபரம் | மீளளிக்கக் கூடிய வைப்ப (ரூபா) | பார்வையிடக்கூடிய நீதிவான் நீதிமன்றம் |
|---|---|---|
| 4. Bajaj pulsor மோட்டார் சைக்கிள் | 1,000 0 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம் |
| 5. Auto Mahendra முச்சக்கர வண்டி | 2,000 0 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம் |
| 6. Isusi Elf (250 கன்ரர்) | 1,000 0 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம் |
| 7. Hero Honda (Black) | 1,000 0 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம் |
| 8. Hero Honda (Black) | 1,000 0 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம் |
| 9. Bajaj (Black) | 1,000 0 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம் |
| 10. Bajaj (Red) | 1,000 0 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம் |
| 11. Bajaj (Black) | 1,000 0 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம் |
| 12. Bajaj (Black) | 1,000 0 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம் |
| 13. Mahendra (Silver) | 1,000 0 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம் |

கேள்விப்பத்திரங்களை மேல் நீதிமன்ற நீதிபதி, மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபால் உறையிலிட்டு ஒட்டப்பட்டு சீலிடப்பட்டு 2017.12.27 ஆந் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக மேல் நீதிமன்றக் கணக்கீட்டுக் கிளையில் உள்ள கேள்விப் பெட்டியில் (Tender Box) இடுதல் வேண்டும். தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் பகிரங்க கேள்வி மூலம் "பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரம் - 2017" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

எம். இளஞ்செழியன்,
தவிசாளர்/மேல் நீதிமன்ற நீதிபதி,
மேல் நீதிமன்ற பெறுகைக் குழு.

மேல் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

12- 37

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைய பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: மடவல நியுஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : பீவீ 125226
பதிவுத் திகதி : 2017.08.31.
முகவரி : 51, நாபான, குன்னேபான, கண்டி

சென்ட்ரா மெனேஜ்மன்ட் கன்சல்டண்ட்
(பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்.

12- 27

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைய பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: இஸ்ட் கோஸ்ட் இன்வஸ்மன்ட் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : 81981
பதிவுத் திகதி : 2011.10.19
முகவரி : கெபிடல் ரெசிடன்சி, 65- 7/4, தர்மபால மாவத்தை, கொழும்பு 7.

சென்ட்ரா மெனேஜ்மன்ட் கன்சல்டண்ட்
(பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்.

12- 28

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைய பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: இமெக்ஸ்மா மைன்ஸ் அன்ட் கெமிகல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : 107443
பதிவுத் திகதி : 2015.07.30
முகவரி : திகனதென்ன எஸ்டேட், தெல்தேனிய ரோட், திகண

சென்ட்ரா மெனேஜ்மன்ட் கன்சல்டண்ட்
(பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்.

12- 29

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைய பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: டிம்பர் அன்ட் ப்ளின்ட் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : 126949
பதிவுத் திகதி : 2015.11.06
முகவரி : 131, எகொட உயன ரோட், எகொடஉயன, மொரட்டுவை

சென்ட்ரா மெனேஜ்மன்ட் கன்சல்டண்ட்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்.

12- 30

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : இத்தாலி - இலங்கை ஹோட்டல் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இல. : பீவீ 126622
பதிவு முகவரி : இல. 17/420, பம்பகெட்டிய கொட வத்த, மாஜுவான, கெரேதிவல
பதிவு செய்யப்பட்ட திகதி : 2017. 10. 27

பணிப்பாளர்.

12- 31

---

### கம்பனியொன்றின் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படுகின்ற கம்பனியின் பெயரை 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் நியதிகளின் கீழ் 2017, நவெம்பர் 20 ஆந் திகதி மாற்றம் செய்யப்பட்டது என இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.-

கம்பனியின் முன்னைய பெயர் : இந்த்ரா ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 19165
திகதி : 2017, நவெம்பர் 20
கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : 117, சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 2.
கம்பனியின் செயலாளர்கள் : கீல்ஸ் கன்சல்டன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் புதிய பெயர் : ப்ரேபுரூக் ரெசிடன்சல் புரோபர்டீஸ் (பிறைவேட்) லிமிட்டட்

சபையின் கட்டளைப்படி,

கீல்ஸ் கன்சல்டன்ட்ஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்கள்.

12- 106

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : புரோட்வே லங்கா ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 126363
கம்பனியின் பதிவு முகவரி : 29/A, கொரசகஹ தொட்டுபொள வீதி, எகொட உயன, மொறட்டுவை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.10. 13

கம்பனியின் பெயர் : இந்து - நெத் என்டர்பிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 126522
கம்பனியின் பதிவு முகவரி : இலக்கம் 11, பாம்குரோவ் அவனியு, கொழும்பு 3
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.10. 20

கம்பனியின் பெயர் : ஜவரி கெஷுவ் புரொடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 126809
கம்பனியின் பதிவு முகவரி : 123/C/1, மாகேவிட்ட, ஜாஎல
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.10. 30

R.K.L.S. கோப்பரேட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

12- 116

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைய , பின்வரும் கம்பனிகள் பின்வரும் பெயர் மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல்களுடன் கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கம்பனியின் பெயர் : கிஷுனா இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 125903
கம்பனிப் பதிவலுவலகம் : இல. 250, வரகொட வீதி, களனி, இலங்கை

கம்பனியின் பெயர் : தின பிரீமா ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 126272
கம்பனிப் பதிவலுவலகம் : இல. 301, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் "டீ" சொலுஷியோ
(பிறைவேட்) லிமிட்டட்
செயலாளர்.

12- 118

---

### சித்றோ அப்பரல் ஹோல்டிங்ஸ் லிமிட்டட்

(கடன் கொடுத்தோர் தன்னிச்சையான ஒடுக்குதல்)
(கம்பனி பதிவு இலக்கம் பீ. பி. 1729)

### கம்பனியின் இறுதிப் பொதுக்கூட்டம் , கடன்கொடுத்தோர் கூட்டம் மற்றும் கம்பனி கலைத்தலுக்குமான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 341(1)ஆம் பிரிவிற்கமைவாக மேற்படி கம்பனியின் கடன் கொடுத்தோர் கூட்டம் மற்றும் கலைப்புக்கு முந்திய இறுதிப் பொதுக்கூட்டம் என்பன 2018 ஆம் ஆண்டு சனவரி மாவதம் 19 ஆந் திகதி பிற்பகல் 4.00 மணியளவில் கொழும்பு 4, காசல் ஒழுங்கை, இலக்கம் 11 , 3 ஆம் மாடியில் அமைந்துள்ளது (Bord Room) இல் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தல் பற்றிய விபரங்களை அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காகவும் கூட்டப்படுகின்றது. அதாவது,

1. ஒடுக்குதல் எவ்வாறு நடைபெற்றது.
2. கம்பனியின் சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றை விற்று ஒதுக்கிய முறை மற்றும்
3. இவை பற்றிய விளக்கம் அளித்தல்

P.E.A. ஜயவிக்ரம , G.J. டேவிட் ,
இணை கலைப்பாளர்.
சித்றோ அப்பரல் ஹோல்டிங்ஸ்
(பிறைவேட்) லிமிட்டட்.

2017, நவெம்பர் 21.

12- 119

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைய கூட்டிணைக்கப்பட்ட அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : ஒஸ்டேசியா எனர்ஜி சொலுஷன் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவு இலக்கம் : பீவீ 127367
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.11.17
பதிவு செய்யப்பட்ட முகவரி : 137/8, கேகாலை வீதி, பொல்கஹவெல

கம்பனி செயலாளர்.

12- 138

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் , கீழ் வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : கேம்ஸ் ஸ்ட்ரீட் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 127395
பதிவு முகவரி : 104, கீழ்த்தரைத் தளம், யுனிடி பிளாஸா, கொழும்பு 4
பதிவுத் திகதி : 2017, நவெம்பர் 20

செயலாளர்.

12- 139

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் , கீழ் வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ப்ளக்ஹில்ஸ் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 124163

பதிவு முகவரி : 96/6/6N, செனவிரத்ணாராம வீதி, மெகொட
கொலொன்னாவ, கொலன்னாவ

பதிவுத் திகதி : 2017, யூலை 25

செயலாளர்.

12- 140

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குிறப்பிடப்பட்ட கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: ரீச் பியோண்டு (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : ஜீஏ 3328
பதிவு முகவரி : இல.27, அனுல ரோட், கொழும்பு 6

கம்பனியின் பெயர்: இங் சிவில் இன்ஜினியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 124479
பதிவு முகவரி : இல.42 ,3/2 டீ, கிரெட்சர் பிளேஸ், சீகல் அப்பார்ட்மன்ட் , கொழும்பு 4

கம்பனியின் பெயர்: போன் ஓஷன்ஸ் சீஃடுஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 124897
பதிவு முகவரி : இல.7/3, 34, மெல்போர்ன் அவென்யூ, கொழும்பு 4

கம்பனியின் பெயர்: ட்றைடன் க்லோபல் சிபிங் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 125436
பதிவு முகவரி : இல.48, டீ லா சல்லே வீதி, கொழும்பு 15

கம்பனியின் பெயர்: எக்குவாலியா லீப் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 125735
பதிவு முகவரி : இல.69/14, கட்டுமன , நுவரெலியா

கம்பனியின் பெயர்: ஒடோ பாஸ்ட் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 125845
பதிவு முகவரி : இல.51/1, நீர்கொழும்பு வீதி, வத்தளை

கம்பனியின் பெயர்: எக்டிவ் டிரான்ஸ்போர்டர் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 126521
பதிவு முகவரி : இல.ஏ 1/1, இல. 280, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8

கம்பனியின் பெயர்: பண் அன்ட் த சன் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 126448
பதிவு முகவரி : அம்பிட்டிய வத்த, வெல்ஹெங்கொட, ஹாங்கம

கம்பனியின் பெயர்: ஃடுஸ் போர் தோர்ட் கோல் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 126812
பதிவு முகவரி : இல.24 3/1, டீல் வீதி, கொழும்பு 3

கம்பனியின் பெயர்: ஃடுஸ் போர் தோர்ட் கலம்பு (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 126775
பதிவு முகவரி : இல.24 3/1, டீல் வீதி, கொழும்பு 3

12- 162

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி 2017.08.30 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : மெலிபல் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 125016
பதிவு முகவரி : இல.47, அலெக்ஸ்சான்றா பிளேஸ், கொழும்பு 7

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
( பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

12- 176

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி 2017.08.16 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : யுத் இன்வெஸ்ட்மென்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 124725
பதிவு முகவரி : இல.47, அலெக்ஸ்சான்றா பிளேஸ், கொழும்பு 7

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
( பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

12- 177

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர் : ரீப்டிஜிட்டல் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 127129
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.11.10
பதிவு முகவரி : 3 ஆம் மாடி, 321, காலி வீதி, கொழும்பு 3

சபையின் கட்டளைப் பிரகாரம்,
F.J.& G.de Saram,
கம்பனிச் செயலாளர்.

12- 270

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : டீ.பீ.சீ. லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம்: பீவீ 127001
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.11. 07
பதிவு முகவரி : இல. 216, டீ சேரம் பிளேஸ், கொழும்பு 10.

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கோர்பரேட் சர்விசஸ் ( பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்கள்,
D.P.C. லங்கா ( பிறைவேட்) லிமிட்டட்.

12- 271

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றியமைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : பெரென் செகியுரிடி (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 12363
பெயர் மாற்றியமைக்கப்பட்ட திகதி : 2017.10.31
பதிவு முகவரி : இல. 754, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை
கம்பனியின் புதிய பெயர் : செகியுரிடாஸ் லங்கா ( பிறைவேட்) லிமிட்டட்

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கோர்பரேட் சர்விசஸ் ( பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

12- 272

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர் : த டிசைன் டிவெலொப்மன்ட் கோர்பரேஷன் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 127392
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.11.20
பதிவு அலுவலகம் : இல.6, டொன் கரோலிஸ் வீதி, கொழும்பு 7

கம்பனியின் பெயர் : ஓட்டோபான் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 127450
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2017.11.21
பதிவு அலுவலகம் : இல.146/4,ஹவ்லொக் வீதி, கொழும்பு 5

பினான்சியல் அன்ட் பிசினஸ் அசோசியேட்ஸ்
( பிறைவேட்) லிமிட்டட்,
செயலாளர்.

12 - 273

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவிற்கமைவான அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : லியான ஹோம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 92850
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 416, பிரத்திபா மாவத்தை, படுவத்த, ராகம
பதிவு செய்யப்பட்ட திகதி : 2013.06.06

கம்பனிச் செயலாளர்.

12 - 280

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 135, அபயபுர, திருகோணமலையில் வசிக்கும் வீரகோன் ஆரச்சி முதியன்சேலாகே தர்சன நளின் துஷார வீரகோன் ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திரு. டபிள்யூ. எம். கிரிஷாந்த பண்டார என்பவரினால் 2014.10.10 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்ட 759 ஆம் இலக்கமுடையதும் , இல. பீ 7/2, சிங்ஹாரமுல்ல, களனிய என்ற முகவரியில் வசிக்கும், அனில் சுசந்த அதுகோரல என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவமானது இன்று முதல் செல்லுபடியாகும் வண்ணம் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இதன் பின்னர் என் சார்பில் அவர் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளிற்கும் நான் பொறுப்புதாரியல்லவெனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

W.A.M.D.N. துஷார வீரகோன்.

12- 36

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஸ்வீடன், 12352, பார்ஸ்டா, சிகுக்வகன் 7 இல் வசிக்கும் இப்பொழுது "மையத்திரி" கினிவிட மஹபல்லேகமவில் வசிக்கும் சுனேத்தரா மைத்திரிபால ஆகிய அற்றோணி அதிபதியான என்னால் 2016.12.08 ஆந் திகதி பிரசித்தி பெற்ற நொத்தாரிசுமான திரு. மதுபான சதுரங்க ஹெட்டிகம என்பவரால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 616, 617 கொண்ட அற்றோணி அதிகாரப் பத்திரத்தின் மூலம் இல. 13/1- டொனல்ட் ஜன்ஸ் வீதி, படகங்வில, காலியில் வசிக்கும் சுகத் இந்திக புழுகும்புர என்பவரை எனது அற்றோணி அதிகாரியாக நியமிக்கப்பட்ட அற்றோணி அதிகாரத்தை வலுவிழக்கச் செய்து முடிவடைய செய்து இரத்துச் செய்ததாக இலங்கை அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன் .

சுனேத்தரா மைத்திரிபால.

12-44

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

சீதுவை, லியனகேமுல்லை, பபாகுருவத்த, இல. 77/ 02 என்னும் முகவரியில் வதியும் தே.அ.அ.இல. 686883523V ஐ உடைய அமரசிங்க கங்கானமலாகே நாளனி பிரியகாந்தி அப்புஹாமி ஆகிய நான், வயிக்கால, போலவத்த 'சன்சியம்' என்னும் இடத்தில் வதியும் தே.அ.அ.இல. 510950410V ஐ உடைய ஜோசப் எம்மானுவேல் பெரேரா மற்றும் தே.அ.அ.இல. 587413400V ஐ உடைய ஒகஸ்டா அம்ரிட்டர் மனோரி பெரேரா திருமணத்திற்கு முன்பு சோசா என்பவரினால் அற்றோணிதத்துவதாரராக நியமித்து சுரங்க பர்னாந்து பிரசித்த நொத்தாரிசின் 2013.03.09 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 8824 ஐ உடைய அற்றோணித் தத்துவத்தினை இன்று தொடக்கம் இரத்துச் செய்து அதிகாரமற்றதாக்குவதாகவும் அதன் அற்றோணி தத்துவத்தின் மூலம் பெறப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் என்னால் ஜோசப் எம்மானுவேல் பெரேரா மற்றும் ஒகஸ்டா அம்ரிட்டா மனோரி பெரேரா திருமணத்திற்கு முன்பு சோசா என்பவர்களுக்காக இன்று தொடக்கம் எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் அல்லது நடவடிக்கைகளினை நிகழ்த்த மாட்டேன் என்று இலங்கை அரசாங்கத்திற்கும் மற்றும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமரசிங்க கங்கானமலாகே நாளனி
பிரியகாந்தி அப்புஹாமி .

12-80

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

நயித்தமடம், கிழக்கு நயித்தமடம், இல. 154 என்னும் இடத்தில் வதியும் தே.அ.அ.இல. 677262974V ஐ உடைய முத்துபந்தன போருதொட்டகே மேரியன் சயிரா காந்தி பர்னாந்து அல்லது முத்துபந்தன போருதொட்டகே மேரியன் சஹிரா காந்தி பர்னாந்து ஆகிய நான், பொது மக்களுக்கு மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு தெரிவிப்பதாவது பிரதிக்கினையான நான், மற்றும் எனது கணவராகிய ஜயசூரிய குரணகே மெரில் பீலிக்ஸ் என்டனி பெரேரா ஆகிய எங்களால் நயித்தமடம் , கிழக்கு நயித்தமடம், புனித ஜூட் மாவத்தையில் வதியும் தே.அ.அ.இல. 902321926V இலக்கமுடைய ஜயசூரிய குரணகே ருவன் சம்பத் பெரேரா என்பவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட சுரங்க பர்னாந்து பிரசித்த நொத்தாரிசினால் 2012.01.14 ஆந் திகதி எழுதி உறுதிப் படுத்தப்பட்ட இலக்கம் 6517 ஐ உடைய அற்றோணித்தத்துவத்தினை எனது கணவராகிய ஜயசூரிய குரணகே மெரில் பீலிக்ஸ் என்டனி பெரேரா என்பவர் இறப்பெய்திய காரணத்தினால் இலக்கம் 6517 ஐ உடைய அற்றோணித் தத்துவத்தினை இன்று தொடக்கம் இரத்துச் செய்து அதிகாரமற்றதாக்குவதாகவும் இன்று தொடக்கம் ஜயசூரிய குரணகே ருவன் சம்பத் பெரேரா என்பவரினால் எமக்காக மற்றும் எமது பெயரில் மேற்கொள்ளப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கல் களும் செல்லுபடியாகாது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

முத்துபந்தன போருதொட்டகே மேரியன்
சயிரா காந்தி பர்னாந்து அல்லது
முத்துபந்தன போருதொட்டகே மேரியன்
சஹிரா காந்தி பர்னாந்து.

12-81

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 5, கவர் வீதி, இலக்கம் 754/V. கமகே துமிந்த சுஜானா உமகளிய ( தே.அ.அ.இல. 641980730V ) ஆகிய நான் எஸ்.ரீ. பெரேரா பிரசித்த நொத்தாரிசு அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு கொழும்பு 08, 80/03 , குருப்பு வீதி, ருசிந்திரா சானக ஜயசேகர (தே.அ.அ.இல. 641720941V) அவர்களுக்கு என்னால் வழங்கப்பட்ட 2017, பெப்புருவரி 07 ஆந் திகதிய இலக்கம் 247 கொண்ட அற்றோணித்தத்துவம் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருவதுடன் இதன் பின்னர் அது வெற்றும் வெறிதாக் கப்பட்டுள்ளதென கருதப்படும் எனவும் அறியத்தருகின்றேன்.

12-165

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

9640 Hingston Downs Colombia MD 21046 USA ( NIC No. 641980730V) இல் வசிக்கும் கமகே துமிந்த சுஜானா உமகிளிய ஆகிய நான், USA, Maryland, Howard Country இல் வசிக்கும் பிரசித்த நொத்தாரிசு Deborah Lynn Reid என்பவரினால் 2014.05.05 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் இல. 80/3, குருப்பு வீதி, கொழும்பு 08 இல் வசிக்கும் ருசின்ந்ரா சாணக ஜயசேகர (தே.அ.அ.இல. 641720941V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவமானது இரத்துச் செய்து இல்லாதொழிக்கப் படுகின்றதெனப் பொது மக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

12-166

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 5, கவர் வீதி, இலக்கம் 754/டி, கமகே துமிந்த சுஜானா உமகளிய ( தே.அ.அ.இல. 641980730V ) ஆகிய நான் சீ.எஸ்.கிரிந்திவெல பிரசித்த நொத்தாரிசு அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு கொழும்பு 08, 80/03 , குருப்பு வீதி, ருசிந்திரா சானக ஜயசேகர (தே.அ.அ.இல. 641720941V) அவர்களுக்கு என்னால் வழங்கப்பட்ட 2012, மாச்சு 13 ஆந் திகதிய இலக்கம் 1170 கொண்ட அற்றோணித்தத்துவம் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருவதுடன் இதன் பின்னர் அது வெற்றும் வெறிதாக்கப் பட்டுள்ளதென கருதப்படும் எனவும் அறியத்தருகின்றேன்.

12-167

---

## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாரவில, வீரஹெனவைச் சேர்ந்த எஸ். எச். கே. கபில ரஞ்சித் பண்டார சேமசிங்க ஆகிய நான் இத்தால் இலங்கை அரசாங்கத்திற்கும், பொது சனத்திற்கும் தெரிவித்துக்கொள்வது என்னால் 2017.03.08 ஆந் திகதியிடப்பட்ட 1297 ஆம் இலக்கமுடைய எம். வர்ணபால கவுன்சிலரால் ( தே.அ.அ.இல. 466682519V) கொண்ட பத்மா சிரியலதா சேமசிங்கவிற்கு கொடுக்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்துள்ளேன் என தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ். எச். கபில பண்டார சேமசிங்க,
கடவுச் சீட்டு இலக்கம்: N 2020605.

வீரஹேன,
நாத்தாண்டிய.
12-254

# ஏல விற்பனைகள்

**கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ**
***கல்கிஸ்ஸைக் கிளை***

பகிரங்க ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-*

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், தல்பிட்டி தெபத்த பாணந்துறை தொட்டமுன பாணந்துறை நகர சபை எல்லையில் பாணந்துறை பிரதேச சபை எல்லை கடவீதிய வடக்கு கிராம சபை டிவிசம் 2 இலக்கம் 685A பட்டிய கிராமத்தில் கட்டிட இல. 41-A/4 ஜயதிலக்க மாவத்தையில் அமைந்துள்ள கோன்கஹவத்தை அல்லது மூணமல்காவத்த மற்றும் கோண்காவத்த காணியின் நில அளவையாளர் பி. ஏ.பி த சில்வாவின் 2010.06.18 ஆம் திகதியுடைய வரைபட இலக்கம் 149 இல் காண்பிக்கப்பட்ட பகுதிபடுத்திய லொட் 02 என்ற காணியின் விஸ்தீரணம் பத்து தசம் பூச்சியம் எட்டு பேர்ச். - (0ஏ.0றூ.10.08பேர்.) அல்லது 0.0255 ஹெக்டயார் மற்றும் இக்காணியில் உ ள்ள மரங்கள், தாவரங்கள் எல்லாம் சேர்த்து**

**பட்டிய கிராமத்தில் அமைந்துள்ள கோன்கஹவத்தை அல்லது மூணமல்காவத்த மற்றும் கோண்காவத்தை காணியில் லொட் B5 (ரோட்) ஆறு தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ.0றூ.6.75பேர்.) இக்கீழ்க்காணும் காணியூடாக பாதைக்கு பாவிக்கும் உரிமையுடன்**

கடன் எடுத்த தினுக் ஏசான் மென்டிஸ் மேற்படி காணியை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடு வைத்துள்ளார்கள் .

மேல் சொல்லப்பட்ட காணி என்னால் பகிரங்க ஏலம் மூலம் 2018ஆம் ஆண்டு சனவரி மாதம் 05ஆந் திகதி காணியை அதே இடத்தில் மு.ப.11.00 மணிக்கு விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்கு**:- 2014.07.18 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும்,2014.07.21 ஆந் திகதியுடைய "லக்பிம", "த ஜலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும், 2017.12.08 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2017.12.11 ஆந் திகதியுடைய "லக்பிம", "த ஜலன்ட்" மற்றும் "வீரகேசரி "ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்கு செல்லும் விதம்**.-காலி ரோட்டிலிருந்து பாணந்துறை கொமர்ஷல் பாங்க் வரை சென்று இடது பக்கம் திரும்பி ஜயதிலக மாவத்தை ஊடாக சிறிது தூரம் சென்று இடது பக்கம் காணி அமைந்துள்ளது.

**கட்டணம் செலுத்தும் விதம்**.- உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;
(7) VAT வரி .

கொள்வனவு விலையின் மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது கல்கிஸ்ஸை கிளையில் செலுத்த வேண்டும்.

**வேறு விபரங்களுக்காக** .- முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல.234A , காலி வீதி , கல்கிஸ்ஸை.
தொலைபேசி இல. : 011- 2737074-5.
தொலைநகல் இல. : 011-2737067.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.

தொலைபேசி/தொலைநகல் இல. 011-2445393.
மின்னஞ்சல்: senaservice @ sltnet.lk

12- 158

---

**யூனியன் பேங்க் ஒவ் கொழும்பு பீ.எல்.சீ.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் விற்பனை அறிவித்தல்*

***அட்டவணை***

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில் மாரவில பதிவுப்பிரிவிற்குள் பிட்டிகல் கோரளை தெற்கின் கம்மல் பற்றுவில் நாத்தாண்டிய பிரதேச செயலகப் பிரிவில் நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்குள் மெத பஹல கட்டுனேரிய கிராம அலுவலர் பிரிவுக்குள் பஹல கட்டுனேரிய கிராமத்தில் அமைந்துள்ள மதன்கஹவத்த எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. லக்ஷ்மன் எச். பிரனாந்துவால் தயாரிக்கப்பட்ட 1999.03.09 ஆந் திகதியிடப்பட்ட (2013.07.15 ஆந் திகதியில் அதே உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் உறுதிப்படுத்தப்பட்ட) இலக்கம் 2429 ஐ உடைய நிலஅளவைத் திட்டத்தில் காணித்துண்டு 01 எனக் குறித்துக் காட்டப்பட்ட அனைத்தும் பிரிக்கப்பட்ட மற்றும் எல்லை வரையறுக்கப்பட்டுள்ள காணிப்பகுதி. இந்தக் காணி அதிலுள்ள ஏனைய அனைத்துடனும் பரப்பளவில் (0ஏ.1றூ.02பே.) ஒரு றூட் இரண்டு பேர்ச்சுக்களை உடையது.

சிலாபம் பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. சிறீனா நிலுக்ஷி திசேராவால் உறுதிப்படுத்தப்பட்ட 2013.09.10 ஆம் திகதிய இலக்கம் 1416 ஈட்டுமுறி 2014.11.10 ஆம் திகதிய இலக்கம் 1909 ஈட்டுமுறி மற்றும் 2016.02.26 ஆம் திகதிய இலக்கம் 2465 ஈட்டுமுறி ஆகியவற்றுக்கு ஏற்ப சிக்ஸ்த் சென்ஸ் ட்ரேடிங் ( பிறைவேட்) லிமிட்டட் மற்றும் ஜயசூரிய குரநாகே ஜோர்ஜ் செலிரஸ் பெரேரா ( இதன் பின்னர் ஈடுவைப்பாளராக குறிக்கப்படுவர்) அதிலுள்ள அட்டவணையில் கூடுதலாக விபரிக்கப்பட்ட ஆதனத்தை பெற்றுக் கொண்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்கான ஒரு பிணையாக ஈடுவைத்து ஒப்படைத்துள்ளதுடன் கூறப்பட்ட சிக்ஸ்த் சென்ஸ் டிரேடிங் ( பிறைவேட்) லிமிட்டட் மற்றும் ஜயசூரிய குரநாகே ஜோர்ஜ் செலிரஸ் பெரேரா கூறப்பட்ட முறி மூலம் பெற்றுக் கொண்ட வசதிகளுக்கான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனர்.

கூறப்பட்ட யூனியன் பேங்க் கொழும்பு பீஎல்சீ யால் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு ஏற்ப மேலே கூறப்பட்ட ஆதனங்களை அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யவுள்ளோம்.

ஏல விற்பனை 2017, திசெம்பர் 28 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு நடைபெறும்.

**ஆதனத்தை வந்தடைதல் :** கொழும்பிலிருந்து புத்தளம் வீதி வழியாக பயணம் செய்து 49 ஆவது கிலோ மீற்றர் போஸ்ற் கடந்து சென்று மேலும் சுமார் 400 மீற்றர் சென்று இடது கைப்பக்கம் அமைந்துள்ள சம்பந்தப்பட்ட ஆதனத்தை வந்தடையலாம்.

**கொடுப்பனவு முறை**.- கொள்வனவு முயற்சியில் வெற்றிபெறுபவர் ஏல விற்பனை முடிந்ததுமே பின்வரும் பணத்தொகையினை ஏல விற்பனையாளரிடம் காசாக செலுத்துதல் வேண்டும்.

(1) முடிவுசெய்யப்பட்ட விற்பனை விலையின் பத்து (10 %) சதவீதம் ;
(2) விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி 90 வீதமும் யூனியன் பேங்க் ஒவ் கொழும்பு பீஎல்சீ இன் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%);
(4) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;
(5) விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு அறவீடுகள் 100% ;
(6) இலிகிதர், முரசறைவோர் கூலியாக 1,000 ரூபா ;
(7) நொத்தாரிசுக் கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் 2,000 ரூபா.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்புகொண்டு பெற முடியும் :

சட்டப் பிரிவு, யூனியன் பேங்க் ஒவ் கொழும்பு பீஎல்சீ, இல. 64, காலி வீதி, கொழும்பு 3, தொலைபேசி இல. 011-2374100.

திரிவன்கா மற்றும் சேனாநாயக்க ஏலவிற்பனையாளர்,
உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம்,
கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 200,
ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. 011- 2445393, 077-3242954.

12- 159

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ –திக்வெல்ல கிளை**
(முன்பு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பெறுமதி மிக்க ஆதனம் பகிரங்க ஏல விற்பனை*

**கடன் எடுத்த செயினுள் அரீப் பஹுசுல் நஸ்மி ( இவ் அட்டவணையில் 1 ஆவது சொல்லப்பட்ட காணி சம்பந்தமாக) மாத்தறை பிரசித்த நொத்தாரிசு டி. என். பின்திய 2012.09.28ஆம் திகதியுடைய முறி இலக்கம் 2322 மற்றும் மாத்தறை பிரசித்த நொத்தாரிசு யு. என். சந்திரலதா 2016.09.09 ஆம் திகதியுடைய முறி இலக்கம் 10119 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும்,**

